கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(17.11.2019 - 17 கார்த்திகை, 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 220, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



அனைத்துலகுக்கும் அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பெருவிழா 24.11.2019

## ஆன்மீகம் இல்லாத மனித வாழ்வு நிறைவானதல்ல



பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில், **“ஜப்பான் – இலங்கை அகோன்சூ நட்புறவு”** என்ற 27வது வருடாந்த வைபவம் அண்மையில் நடைபெற்றபோது மாணவ, மாணவிகளும், அவர்களின் பெற்றோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்துக்கொண்டு உரையாற்றும்போது, இவ்வுலகில் வாழும் மனிதர்களாகிய எமது பெரிய சொத்து ஆன்மீக வாழ்வாகும். ஆயினும் ஆன்மீகம் என்ற கண்ணுக்குத் தெரியாத சொத்தைவிட, இவ்வுலக சொத்தையே நாம் சார்ந்து வாழ்கிறோம். ஆன்மீக வாழ்வு இன்றி மனித வாழ்வு முழுமையடையாது!
நாம் சரியான முறையில்...

15



கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பணியாற்றிய இறைவனடி சேர்ந்த கர்தினால், ஆயர்கள், அருட்பணியாளர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக விஷேச திருப்பலி கடந்த 11ம் திகதி திங்கட்கிழமை அன்று பேராயர் இல்ல சிற்றாலயத்தில் கர்தினால் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.



**யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை 28.11.2019 அன்று தனது ஆயர் திருநிலைப்படுத்தல் நினைவு நாளை கொண்டாடுகின்றார். இவரை ஞானஒளி வாழ்த்துகின்றது**



## வாழ்த்துகின்றோம்

**தமது பெயர்கொண்ட திருநாளையும் பிறந்த நாளையும் 15.11.2019 அன்று கொண்டாடும் எமது பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உடல் உள நலத்தோடு வாழ ஞான ஒளி செபத்தோடு வாழ்த்துகின்றது.**

## “பக்தி பிரபோதனய” மாதாந்த சஞ்சிகைக்கு புதிய ஆசிரியர்



அமலமரி தியாகிகளால் வெளியிடப்படும் “பக்தி பிரபோதனய” சஞ்சிகைக்கு அருட்பணி. எமாட் தல்பத்தாது அ.ம.தி அடிகளார் நியமிக்கப்பட்டார். நீர்கொழும்பு புனித மரியாள் மகா வித்தியாலயத்தில் பயின்று 1988ல் கொகுவல அ.ம.தி குருமடத்தில்இணைந்து துறவறம் பூண்ட இவர் 1994 ஆவணி 27ம் திகதி சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு. பிராங்க் மாக்கஸ் ஆண்டகையினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் கொழும்பு..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## “தொண்டன்” சஞ்சிகையின் பொன்விழா



மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்தும் “தொண்டன்” சஞ்சிகையின் பொன்விழா நிகழ்வு 12.11.2019 அன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு, சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியர் அருட்பணி....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இறைபதம் அடைந்தார்.



அருட்பணி. சிறில் யோசப் அடிகளார் 12.11.2019 அன்று இறைபதம் அடைந்தார். இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கின்றது

## இரத்தினபுரி மறைமாவட்டம் யூபிலி ஆண்டாக பிரகடனம்



கடந்த 2019.11.03 ஞாயிறன்று இரத்தினபுரி புனித இராயப்பர் - சின்னப்பர் பேராலயத்தில் இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிட்டஸ் பெரேரா OSB ஆண்டகை ஜுபிலிக்கான விசேட கொடியை ஏற்றி வைத்து யூபிலி ஆண்டை பிரகடனம் செய்தார். “மரியன்னை நற்கருணைக்கு எம்மை அழைத்துச் செல்கின்றார்” என்ற கருப்பொருளை கொண்டு இவ்வாண்டு முழுவதும் தியானிக்கப்பட்டு அடுத்த வருடம் யூபிலி ஆண்டு நிறைவுக்கு வரும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## புனித பிரான்சிஸ்குவின் மரியாளின் மறைபரப்பு சபைக்கு புதிய மாகாணத்தலைவி



புனித பிரான்சிஸ்குவின் மரியாளின் மறைபரப்பு சபைக்கு புனித மாகாணத் தலைவியாக அருட்சகோதரி எல்சி றொட்ரிகோ அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் பணி வாழ்வு தொடர்ந்து சிறப்புற்று அமை ஞான ஒளி இறையாசீரோடு வாழ்த்துகின்றது.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## அனைவரினதும் கவனத்திற்கு...!

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால், இந்திகொல்ல புனித ஜுட் திருத்தல திருவிழாவில் ஆற்றிய மறையுரை, ஜனாதிபதி வேட்பாளருக்கும், கட்சிக்கும் சார்பானது என சமூக ஊடக செய்தியில் வெளியிடப்பட்டிருந்தது. இது தவறான செய்தியாகும்.

பேராயர் ஆற்றிய மறையுரை திருவிவிலியத்தின்படி கத்தோலிக்க மறையுரையாகும் என அன்றைய தினம் பங்குகொண்ட குருமுதல்வர் உள்பட அருட்பணியாளர்களும் உறுதிப்படுத்துகின்றோம். அவர் தனது மறையுரையில் எந்த ஒரு வேட்பாளரைப் பற்றியோ கட்சியைப் பற்றியோ எக்கருத்தும் கூறவில்லை என்பதை தெரிவிக்கின்றேன்.

**தகவல்: அருட்தந்தை ஜூட் ஷாமன் பர்னாந்து அடிகளார்**
**பங்கு பரிபாலகர், புனித யூதா ததேயு திருத்தலம், இந்திகொல்ல**

கொழும்பு அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் பெயர், புகைப்படம், கத்தோலிக்க ஆலயங்களை, ஆயர்களை தொடர்புபடுத்தி, பல அமைப்புகள் வெளியிடும் விளம்பரங்களை நாம் புறக்கணிக்கிறோம்.

பேராயர் சில வேட்பாளர்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கு சார்பாக இருக்கிறார் என்ற தேர்தல் விளம்பரங்களை நாம் கண்டிக்கிறோம். பேராயர் அவர்கள் எந்த ஒரு கட்சிக்கோ வேட்பாளருக்கோ சார்பாக இல்லாமல் சுய சிந்தனையோடு இருக்கிறார் என்பதை ஏற்கனவே உங்களுக்கு அறிவித்துள்ளோம். கத்தோலிக்க மக்கள் தமது சுய விருப்பத்திற்கேற்ப தாம் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு பேராயர் கேட்டுக்கொள்கிறார்.

**ஆசிரியர் – அருட்பணி கெமிலஸ் பர்னாந்து அடிகளார்**



ஜனாதிபதி ஊடகத்தில் வெளியான செய்தியில், விடுதலை செய்யப்பட்ட ‘றோயல் பார்க்” கொலைக்குத் தொடர்பான சூதித்தயா என்ற ஜூற் சிரமந்த அன்தனி ஜயமகவை ஜனாதிபதி மன்னிப்பில் விடுதலையானது பற்றி கூறுகையில், மதத்தலைவர்கள் சிவில் சமூக ஆர்வலர்கள், மேலும் சில அமைப்புகளுடன் இணைந்து, ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினார் என்ற செய்தியில், நான் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட சூத்திதயா பற்றி நான்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**மக்களினங்களை ஆண்டவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார். (தி.பா 98)**

# “கிறிஸ்தவர்கள் மரணத்தை வென்று உயிர் வாழ்பவர்கள்”





கடந்த 2ம் திகதி கட்டுவாப்பிட்டி தேவாலய கல்லறை திருநாள் திருப்பலியின் போது அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சத் ஆண்டகை தனது மறையுரையில் கிறிஸ்வர்கள் தமது வாழ்வில் வரும் வேதனை, மரணத்திற்கு பயந்தவர்கள் அல்ல, இயேசு மரணத்தை வென்று உயிர்த்தார். கிறிஸ்தவர்களாகிய நாமும் மரணத்தை வெல்பவர்கள் என நம்புவோம். உயிர்ப்பை அனுபவிப்பர் என்றார். தொடர்ந்து கூறுகையில் இன்று ஆன்மாக்கள் தினத்தில் நான் கொழும்பிலிருந்து கட்டுவாப்பிட்டியில் உங்களுடன் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கான காரணம் நான் தொடர்ந்து உங்களுடன் இருக்கின்றேன். உங்கள் துக்கம், வேதனை, பிரச்சினையில் பங்கெடுக்கின்றேன் என உங்களுக்கு சொல்வதற்கே. நாமும் ஒருநாள் அவர்களுடன் இணைந்து கொள்வோம் என விசுவசித்து எம்மை திடப்படுத்துவோம் என தெரிவித்தார்.

## “மரணம் என்ற வார்த்தையை கேட்டதும் எமக்கு கவலை ஏற்படுகின்றது. ஆயினும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு மரணம் கவலைப்படும் ஒன்றல்ல. சந்தோஷப்படும் நிகழ்வாகும்”

“மரணம் என்ற வார்த்தையை கேட்டதும் எமக்கு கவலை ஏற்படுகின்றது. ஆயினும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு மரணம் கவலைப்படும் ஒன்றல்ல. சந்தோஷப்படும் நிகழ்வாகும்” அதாவது நித்திய பேரின்ப வாழ்வை அடைகின்றோம் என மாதம்பிட்டிய சேமக்காலையில் கடந்த 2ம் திகதி இறந்த ஆன்மாக்களுக்கான திருப்பலியின் போது கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை கூறினார்.

ஆன்மாக்கள் தினத்தன்று, உயிர்வாழும் நாம், கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்துள்ளார். மகிழ்ச்சியில், சந்தோஷப்படுகின்றோம். நாமும் ஒருநாள் அந்த மகிழ்ச்சியில் இணைந்துக் கொள்வோம் என்றார். கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் பாஸ்கு ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்கள் விதைக்கப்பட்ட கல்லறைக்குச் சென்று ஆசீர் அளித்தார். இதன்போது கொழும்பு உயர்மறைமாவட்ட ஆயரின் பதிலாளர் அதி.வண.



அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகளாரும், கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேரலய பரிபாலகர் அருட்பணி. கித்சிரி சிறிமான்ன அடிகளாரும், கிறிஸ்தவ விசுவாசிகளும் கலந்து கொண்டனர்.

**தகவல் : திரு. சுனில்**

## புனித பியோ ஆலயத் திருவிழா 2019.09.29







ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் ஸ்பிரிஸ் வெளித் தோட்டத்தில் மேமலை பிரதேச மலைச்சிகரத்தில் எழுந்தருளி இருக்கும் தந்தை பியோ அடிகளாரின் ஆலயத் திருவிழா 2019.09.29 (செப்டேம்பர்) அன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை ஜுட் நிசாந்த அடிகளாரின் தலைமையில் அருட்பணி. மாலன் அடிகளாரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இறை மக்கள் ஒன்றிணைந்து சிறப்பாக கொண்டாடினார். அன்று மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு பி.ப 1.00 மணியளவில் இனிதே விழா நிறைவுபெற்றது.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம் (ஆசிரியை)**

## பதுளை புனித மரியாள் பேராலயம் வருடாந்த திருவிழா - 2019



ஊவா மாகாணத்தில் பதுளையாம் பதி அழகிய உயரமான தோட்டத்தோடு காட்சிக் கொடுக்கும் புனித மரியன்னை பேராலயம் எல்லோருக்கும் ஆசீர்வாதத்தை தருவதாக அமைகின்றது. 04.10.2019 அன்று திருப்பலியின் பின்னர் இறைமக்கள் புடைச்சூழ அன்னையின் கொடி ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து ஒன்பது நாட்களாக நவநாள் வழிபாடுகள் நடைப்பெற்றன. பி.ப 4.00 மணிக்கு செபமாலை சொல்லியும் அதனைத் தொடர்ந்து திருப்பலி பி.ப 4.30 மணிக்கு நடைபெற்றது. அனைத்து மக்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். இறுதி நாள் திருவிழா திருப்பலி 13.10.2019 அன்று மு.ப 9.00 மணிக்கு பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு. வின்ஸ்டன் பெர்னாந்து (SSS) ஆண்டகையால் வெகு விமர்சையாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபம் பவனி வந்ததுடன் ஆசீர்வாதம் ஆயரினால் வழங்கப்பட்டது. விசுவாசிகள் அதிக எண்ணிக்கையில் கலந்துக் கொண்டதுடன் மதிய உணவு பெற்றுக் கொண்டனர். பி.ப 1.00 மணியளவில் அன்றைய விழாவானது இனிதே முடிவடைந்தது.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம் (ஆசிரியை)**


### விசேட மறைபரப்பு மாத உபவாச தியானம்

| | | |
|---|---|---|
| தினம் | : | 31ம் திகதி ஐப்பசி மாதம் -2019 |
| இடம் | : | ஹட்டன், வெளிஓயா புனித அந்தோனியார் ஆலயம் |
| தலைமை | : | ஹட்டன் பங்குதந்தை அருட்பணி. நியூமன் பீரிஸ் அடிகளார். |
| நடத்தியவர் | : | மஸ்கெலியா பங்குதந்தை அருட்பணி. கிளமன்ட் யேசுதாசன் அடிகளார். |

செய்தி : விசேட மறைப்பரப்பு மாதத்திற்கான சிறப்பு உபவாச வழிபாடு கண்டி மறைமாவட்ட, நுவரெலியா மறைக்கோட்ட, ஹட்டன் பங்கின் வெளிஓயா புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 31ம் திகதி நடத்தப்பட்டது. இவ்வழிபாடானது நுவரெலியா மறைக்கோட்ட ஆயரின் பதிலாளர் அதி.வண. அருட்பணி. அந்தனி பெர்னாண்டோவின் பங்குபற்றலுடன் ஹட்டன் பங்குதந்தை அருட்பணி. நியூமன் பீரிஸ் அடிகளாரின் தலைமையில், மஸ்கெலியா....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# மரியன்னை நற்கருணைக்கு எம்மை அழைத்துச் செல்கிறார்.










### இரத்தினபுரி மறைமாவட்டம் யூபிலி ஆண்டாக பிரகடனம்

இரத்தினபுரி மறைமாவட்டம் 25வது பிறந்த நாளை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. சபாஷ்! நல்வாழ்த்துக்கள். கடந்த 2019.11.03 ஞாயிறன்று இரத்தினபுரி புனித இராயப்பர் - சின்னப்பர் பேராலயத்தில் இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிட்டஸ் பெரேரா OSB ஆண்டகை ஜுபிலிக்கான விசேட கொடியை ஏற்றி வைத்ததுடன் பங்கு அருட்தந்தை எனஸ்லி சுரங்க, உதவி அருட்தந்தை ஜோய், இரத்தினபுரி மறைமாவட்ட செயலாளர் அருட்பணி. அயால் இந்திக்க, குடும்ப நல, இளைஞர் பணி இயக்குனர் அருட்பணி. நிரோஷன் வாஸ் ஆகியோரும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

1995ம் ஆண்டு காலி மறைமாவட்டத்திலிருந்து இரத்தினபுரி மறைமாவட்டமாக புது பெயர் பெற்று, வேறாகப் பிரிக்கப்பட்டது. “மரியன்னை நற்கருணைக்கு எம்மை அழைத்துச் செல்கிறது” என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்த வெள்ளி விழா அடுத்த வருடம் 25வது நிறைவு ஆண்டாக கொண்டாடப்படும். இன்று 2019.11.03 ஆரம்பிக்கப்பட்ட விழா, அடுத்த கார்த்திகை 3ந் திகதி வரை ஜுபிலி ஆண்டாகக் கொண்டாடப்படும். நமது இறைமக்களின் வாழ்வில் முக்கிய ஆண்டாக இது அமையும். இதன் நிமித்தம் பல ஆன்மீக வேலைத்திட்டங்களும், செயற்பாடுகளும் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. ஆன்மீக வாழ்வு வாழ நாம் எம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும், மனமாற்றம் பெற்று புது மக்களாக, புத்துணர்ச்சியுடன் வாழ வேண்டும். பணிவோடு, தாழ்ச்சியோடு நாம் இறை இயேசுவை நோக்கி வாழ வேண்டும்.

**படம் மற்றும் தொகுப்பு : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம். இரத்தினபுரி**

ஞான ஒளி GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
17 கார்த்திகை, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# “இயேசு உலக அரசர்களிடமிருந்து வேறுபட்டவர்.”

திருவழிப்பாட்டு ஆண்டின் கடைசி ஞாயிரை திருச்சபை இயேசுவை “அனைத்துலகின் அரசர்” என்று அறிக்கையிட்டு கொண்டாடுகின்றது. இத்திருநாள் 1925ஆம் ஆண்டு திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. இயேசு யூதர்களின் அரசர் மட்டுமல்ல, மாறாக அவர் அரசருக்கெல்லாம் அரசர். அதுமட்டுமல்ல இயேசுவை மனித இனத்தின் அரசர் எனவும் கூறுகின்றோம். ஏனென்றால் இந்த மண்ணில் வாழ்ந்த மிகச் சிறந்த மனிதர் அவரே. அரசர் என்பவன் தன்னைச் சூழ்ந்து வாழும் மக்களின் இன்ப துன்பங்களைச் சரியாக புரிந்துகொண்டு அவர்களின் உணர்வுகளையும் ஏக்கங்களையும் தனதாக்கிக் கொண்டு வாழ வேண்டும். அதற்காக உழைக்கவும் பாடுபடவும் வேண்டும், அவரின் அன்பை அவரது அரசில் அனைவரும் அனுபவிக்க அழைக்கிறார்.

இயேசு உலக அரசர்களிடம் இருந்து வேறுபட்டு தனித்தன்மை வாய்ந்த அரசராக விளங்குகின்றார். இதற்கு முக்கிய காரணம், அவர் சமுதாயத்தில் கைவிடப்பட்டோருக்கு காட்டிய அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், நீதி பகிர்வு போன்ற பண்புகளாகும். இப்பண்புகளின் வெளிப்பாடே இயேசுவின் அரசு. இவர் யூதர்களுக்கு மட்டும் அரசரல்ல அவர் அரசர்களுக்கெல்லாம் அரசர்.“அவர் கட்புலனாக கடவுளின் சாயல், படைப்பனைத்திலும், தலைப்பேறு எனவே இயேசு கிறிஸ்து உண்மையான அரசர் என்பதில் ஐயமில்லை. நம்மீது அதிகாரத்தையோ, ஆணவத்தையோ செலுத்த இறைமகன் அரசராகவில்லை. மாறாக நம் அனைவரையும் பராமரித்து அன்பு செய்து பணியாற்றவே அவர் அரசராக விளங்குகிறார். ஆகவே கிறிஸ்துவின் அரசில் நாமும் பங்கெடுக்க வேண்டும். இது ஒரு எளிதான காரியமல்ல? நாம் உண்மையில் வாழ்ந்து உண்மைக்கு சான்று பகர வேண்டும். இதற்கு எம்மிடமுள்ள சுயநலன்களை களைய வேண்டும். விட்டுக் கொடுத்து அன்பு செய்து மன்னித்து பகிர்ந்தளித்து வாழ வேண்டும்.

எமது நாட்டின் தலைவரை தெரிந்தெடுக்கும் நிலையில் நாம் இருக்கின்றோம். எனவே கிறிஸ்து அரசரைப் போன்ற அரசரை நாம் எதிர்பார்க்க இயலாது. எமது நாட்டை நீதியுடனும், நேர்மையுடனும் செயல்படும் ஒருவரை தெரிவு செய்வது, எமது கடமையும் உரிமையுமாகும். ஆகவே ஒரு நல்ல தலைவரை தெரிந்தெடுத்து எமது நாட்டை அமைதியான நாடாகவும், பாதுகாப்புடன் மக்கள் வாழக்கூடிய சூழலையும் உருவாக்குவோம். எனவே உங்கள் வாக்குகளை தகுதியான ஒருவருக்கு அளியுங்கள்.

மேலும் கொழும்பு உயர்மறைமாவட்ட முன்னாள் கர்தினால் தோமஸ் கூறே ஆண்டகையை புனிதராக்கும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இலங்கை வாழ் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் எமது அன்றாட செபங்களில் விரைவில் அவர் புனிதராக்கப்படவேண்டும் என செபிப்போம். இவர் இலங்கை நாட்டின் முதலாவது கர்தினால் ஆவார்.

**இறையாசிருடன் ஆசிரியர்**



# கைம்மாறு கருதாமல் கொடுப்போம்

ஞாயிற்றுக்கிழமை பங்கு குருவானர் மறையுரையில் விண்ணகம் பற்றி விளக்கிக் கூறினார். திருப்பலி முடிந்தது. பங்கு தந்தையை தரிசிக்க வசதிபடைத்த பெண் ஒருவர் வந்தார். அவர் பங்கு தந்தையிடம், “தந்தையே! விண்ணகம் குறித்து மிக அருமையானதொரு மறையுரை ஆற்றினீர்கள் மிக தெளிவாக விளக்கினீர்கள். ஆனால் விண்ணகம் எங்கே இருக்கின்றது என்பதை மட்டும் சொல்லாமல் விட்டு விட்டீர்கள்? ஏன் பாதர் விண்ணகம் எங்கே இருக்கின்றது சொல்லுங்கள்” என்றார். பாதர் இவ்வாறு கூறினார்.

இம்மாதத்தில் நாம் இறந்தவர்கள் நினைத்து அன்னதானம் செய்கின்றோம்? யாருக்கு செய்கின்றோம் எம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும், எமது நண்பர்களுக்கும், சொந்த பந்தங்களுக்கும், சமைத்து சாப்பாடு கொடுக்கின்றோம், அப்படி செய்தால் இறந்தவர்களின் ஆன்மா இளைப்பாற்றி அடையும் என்று நினைக்கின்றோம்.

> “பெருமைக்காக கொடுக்கப்படும் விருந்தும் கைம்மாறு கருதிக் கொடுக்கப்படும் விருந்தும் உண்மையான விருந்தாக இருக்காது.”

**இயேசு இவ்வாறு கூறுகின்றார்**

(லூக் 14:12-14) நீர் பகல் உணவோ, இரவு உணவோ அளிக்கும்போது உன் நண்பர்களையோ, சகோதர சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம் அப்போது அதுவே உனக்குக் கைமாறு அளிக்கும். மாறாக நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும், உடல் ஊனமுற்றவர்களையும், கால் ஊனமுற்றவர்களையும், பார்வையற்றோரையும், அழையும் அப்போது நீர் பேறுபெற்றவர் ஆவீர். ஏனென்றால் உமக்கு கைமாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும் என்றார்.

**சிந்திப்போம்**

பெருமைக்காக கொடுக்கப்படும் விருந்தும் கைம்மாறு கருதிக் கொடுக்கப்படும் விருந்தும் உண்மையான விருந்தாக இருக்காது. திரும்பி செலுத்த முடியாத நிலையில் இருக்கின்ற வறியவர்கள், ஏழைகள், கைவிடப்பட்டோர் ஆகியோருக்குக் கொடுக்கப்படும். விருந்துதான் உண்மையான விருந்து. எவரும் இரண்டு இடங்களில் கைம்மாறு பெறமுடியாது. மனிதரிடம் கைமாறை எதிர்பார்க்கின்றவர் கடவுளிடமிருந்து கைம்மாறு பெறமுடியாது. மாறாக மனிதர்களிடமிருந்து கைமாறு எதிர்பார்க்காதவர்கள் கடவுளிடமிருந்து கைம்மாறு பெறுவார்கள். இதுவே மிக உயர்ந்தது.


ஆகவே, இம்மாதத்தில் நாம் உணவு அளிக்கும்போது வறியவர்களைக் கருத்திற் கொண்டு செயல்படுவோம். இங்கேதான் விண்ணகம் இருக்கின்றது.

(“மனதில் வறியவர்களுக்கு இடமிருந்தால் வீட்டிலும் இடமிருக்கும்”. என்கிறது டானிஸ் பழமொழி)

நாம் நம்முடைய உள்ளத்திலும், இல்லத்திலும் வறியவர்களுக்கு முதன்மையான இடம் தருவோம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.



# உண்மை உறைக்கும்



# நீர் அரசன் தானா...?!

## கிறிஸ்து அரசரின் பெருவிழா

கார்த்திகை 24



### விண்ணகமும் மண்ணகமும் போற்றும் உன்னத அரசர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே!

இஸ்ராயேல் மக்களுடைய வாழ்க்கை அனுபவத்தில் பிறந்து, இறைவாக்கினர்களின் முன்னறிவிப்புக்களால் வளர்ந்ததுமான அரச மெசியா பற்றிய நம்பிக்கையில், அரசர்க்கெல்லாம் அரசராக விளங்குபவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. சீயோனிலிருந்து நித்தியத்திற்கும் அரசாளும் ஒரு மன்னர் இஸ்ராயேலில் உதிப்பார் என இறைவாக்கினர் ஏசாயாவினால் முன்னறிக்கப்பட்டவர் இவரே. **சீயோன் மகளே மிகுந்த மகிழ்ச்சியால் அக்களி, யெருசலேம் மகளே ஆர்ப்பரி, இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார்** (செக்க 9:9) என செக்கரியாஸ் வாழ்த்தி வரவேற்ற தெய்வீக அரசர் இவரே.

கிறிஸ்து கடவுள் என்ற நிலையில் மட்டுமல்ல, மனிதனாகிய மட்டிலும் அரசராக இருக்கிறார். ஆகவே **இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட. இயேசுகிறிஸ்து ஆண்டவர் என்று எல்லா நாவுமே அறிக்கையிடும்.** (பிலிப்பி 2:10-11) என்று புனித பவுலால் அறிமுகப்படுத்தப்படும் மாட்சிமிகு அரசர் இவரே. **மண்ணுலக அரசர்களுக்கெல்லாம் தலைமையானவர்** (தி.வெ1:5) **அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர் என்ற பெயர் அவரது ஆடையிலும் தொடையிலும் எழுதியிருந்தது** (தி.வெ. 19:16) என்று புனித யோவான் காட்சியில் கண்ட தலைவர் இவரே. எல்லா மன்னர்களும் ஆராதித்து அடிபணிந்து அவருக்கு பணிவிடை செய்வார்கள் என சங்கீத ஆசிரியரால் பாடிப்புகழப்பெற்ற தலைசிறந்த மன்னரே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. அவர் மண்ணவர்க்கும் அரசர் விண்ணவர்க்கும் அரசர். சாலமோனைவிட பெரிய ஞானி, தாவீதைவிடச் சிறந்த வீரன். மகா அலக்சாண்டரைவிட பெரிய மன்னன். பிரஞ்சு நாட்டு லூயி மன்னனைவிட பக்திமான். நெப்போலியனைவிடப் பாக்கியசாலி. எல்லா அரசர்களின் ஞானமும், மானமும், வீரமும் தீரமும், பாக்கியமும், பெருமையும், தருமமும் ஒருங்கே அமைந்த வேந்தனே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து.

### இயேசு கிறிஸ்து அரசர், அவரது அரசாட்சி எப்படிப்பட்டது என்பதற்கு விவிலியத்தின் சான்றுகள்...

- யூதரின் அரசரே வாழ்க! (புனித. மத் 27:29)
- ஆட்சியின் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும். அவர் அமைதியின் அரசர் எனப்படுவார். தாவீதின் அரசை நிறுவுவார் (எசா 9:6)
- அவர் பெரியவராய் இருப்பார், யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றைக்கும் ஆட்சி செலுத்துவார். அவர் ஆட்சிக்கு முடிவே இராது (லூக் 1:32)
- நீ அரசன் தானா? (யோவா 18:33)
- யூதரின் அரசனாகிய இவரை நான் விடுதலை செய்யட்டுமா? (யோவா 18:39)

**இறையரசு**

- இறைவன் ஆட்சி செய்கின்ற அரசு இறையரசு, அது இவ்வுலகைச் சார்ந்ததன்று (யோவா 18:36)
- காலம் நிறைவேறி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்! (மாற்கு 1:15)
- செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது (மாற்கு 19:24)
- உங்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்படும், அவ்வாட்சிக்கு ஏற்ற முறையில் செயல்படும் ஒரு மக்களினத்தார் அதற்கு உட்படுவர்! (மத் 21:43)
- நீர் இறையாட்சிக்கு தொலைவில் இல்லை (மாற்கு 12:34)
- நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும் (லூக் 4:43)
- இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்க-ளுக்கு கொடுத்து வைத்திருக்கிறது. (லூக் 18:10)
- கிறிஸ்து அரசர் மண்ணக அரசர்களைப் போன்று அடக்கி ஆளவந்த அரசர் அல்லர், அன்பு செய்து அரவணைக்க வந்த அன்பின் அரசர். நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் (லூக் 6:35)
- வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற பொன்மொழிக்கேற்ப வாடிய மக்கள் மீது இரக்கம் கொண்ட இரக்கத்தின் அரசர். அவர்கள் ஆயனில்லா ஆடுகளைப் போல் தவித்துக் கிடந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டார். (மாற் 6:34)
- ஏழைகளோடு தெருக்களில் நடந்து, ஏழைகளின் சிரிப்பில் தந்தை இறைவனைக் கண்ட ஏழைகளின் அரசர். ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே. (லூக் 6:20)
- மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாக தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுக்கவும், வந்தேன் (மாற் 1837)
- உண்மைக்குச் சான்று பகர்வதே எனது பணி (யோவா 18:37)
- பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் இதயத்தில் தாழ்ச்சியும் கொண்டவன் (மத்11:28) என்று மொழிந்த இதய அரசர்.
- இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று கூறிய அவரின் அரசு மனம் மாறிய பாவிகளின் அரசு.
- இறுதியாக தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்ற அடிமையின் அரசன். (பிலிப் 2:7)

ஆக, கிறிஸ்துவின் ஆட்சி செங்கோலாட்சி, ஜனநாயகம் என்ற பெயரில் தனி நாடகமாடுகின்ற கொடுங்கோல் ஆட்சி அல்ல, அரசுகளுக்கெல்லாம் அவரது ஆட்சி ஒரு சவாலாக உள்ளது. கிறிஸ்துவின் அரியணையின் கீழ் அடிபணிய நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில் அவரின் ஆட்சி அன்பின் ஆட்சி, புனித ஆட்சி, அருள் ஆட்சி, உயிர் பேணும் முடியாட்சி. மாறாக நாம் இவ்வுலகில் காண்பது போன்ற அரக்க ஆட்சியன்று, அடிமை ஆட்சியன்று, உயிரழிக்கும் கொடிய குடியாட்சியன்று. கிறிஸ்துவின் அரசும், ஆட்சியும் இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டது (யோவா 18:36). கிறிஸ்தவ விசுவாசத்திலே வேரூன்றி கிறிஸ்துவை எம் வாழ்வில் ஆதாயமாக்கிக் கொள்ள ஆவலுறும் நாம், கிறிஸ்து அரசரின் வெண் தூய கொடியின் கீழ் அணி அணியாக நின்று அவரது அரசு இவ்வுலகில் மலர குரலெழுப்பி செபிக்கவேண்டும்.

போரும் நெருக்கடியும், அபாயமும், கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும், கூட்டுக்கொலைகளும் கொடுமையும் தாண்டவமாடும் இக்காலத்தில் நம் ஆண்டவர் இயேசு மறுபடியும் நம்மிடையே வரமாட்டாரா? எமது வாழ்வினில் அமைதியைத் தரமாட்டாரா? என ஏங்குகின்ற ஒவ்வொரு உள்ளங்களும் கிறிஸ்து அரசர் திருவிழாவிலே ஒன்று சேர்ந்து **ஆண்டவரே நீர் ஆட்சி செய்வது அவசியம்** என்று புனித பவுலுடன் சேர்ந்து அவரது ஆட்சியை வரவேற்போம். **கிறிஸ்து அரசர் வாழ்க!!** என்ற வாழ்த்தொலி எட்டுத்திசைகளிலும், பதினாறு கோணங்களிலும் நிறையட்டும்! கொடுங்கோல் ஆட்சியினால் தினமும் செத்துப் பிழைக்கும் மனிதர்களுக்கு இறைவனின் அமைதி விரைவில் மலரும் என்ற நம்பிக்கையை எம்மில் கொண்டவர்களாக, இயேசுவை எம் இதய மன்னராக ஏற்று **'அழிவில்லாத, கண்ணுக்குப் புலப்படாத, எக்காலத்துக்கும் அரசராயிருக்கின்ற ஒரே கடவுளுக்கு என்றென்றும் மாண்பும் மாட்சியும் உரித்தாகுக!'** (1 திமோ 1: 17) என்று போற்றிப் புகழுவோம். அரசர்க்கெல்லாம் அரசராகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து நம்மிடையே வருவார். தமது அன்பினால் நம்மையெல்லாம் ஆளுவார்!


**நமக்கு கிறிஸ்து அரசர் கூறும் செய்தி என்ன?**

**உன்னுடைய வீடு கடவுளின் அரசாக இருக்க வேண்டும் என்றால் அன்பு அவ்வீட்டின் கூரையாகவும், அறச்செயல்கள் அவ்வீட்டின் பக்கச் சுவர்களாகவும் இருக்கட்டும். நாம் அன்பையும், அறனையும், கொண்டு வாழும்போது இறையாட்சியின் சொந்தக்காரராக வாழ முடியும்.**

### சிந்தனைக்கு...!

**ஆம் நம் கிறிஸ்து அரசர் இரக்கத்தின் அரசர். ஏழைகளின் அரசர், தொண்டின் அரசர், ஒளியின் அரசர், பாவிகளின் அரசர், அடிமையின் அரசர், இத்தகைய அரசர் நமக்கு கொடுக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி அவர் சொல்வதைப் போல் வாழ்ந்தால் வாழ்வு பெறுவோம்.**

**இன்று நம்முடைய அரசாட்சியை போன்று மக்களை ஆட்டிப்படைத்து, ஏமாற்றி, அடிமைப்படுத்தி பயப்படுத்தி, கொலை செய்து ஆட்சிக்கு வரும் அரசாட்சி அல்ல நம் கிறிஸ்துவின் அரசாட்சி. நமது நாட்டிலும் நல்லாட்சி நிலவ எமக்கு கிடைக்கும், சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்துவோம். நீதியான, நியாயமான அரசியல் அமைப்பு ஏற்பட மன்றாடுவோம். மக்கள் மேல் அன்புக்கொண்டு அவர்களின் நலன் கருதி, நீதிக்கு குரல் கொடுக்க, இதயத்தில் ஈரமும் செயலில் கரிசனையும் கொண்டு வாழுகின்ற மக்கள் ஆட்சி நிலவ செயல்படுவோம்.**



அருட்பணி. யா. றமேஸ். அ.ம.தி

# இவ்வுலக / விண்ணுலக செல்வத்தைக் குறித்து எச்சரிக்கை



இவ்வுலக செல்வத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். விண்ணுலக செல்வத்தைக் குறித்து அறிந்துகொள்ளவும் ஆண்டவர் நமக்கு அறிவுறுத்துகிறார். "மண்ணுலகில் உங்களுக்கென செல்வத்தை சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அழித்துவிடும். திருடரும் அதை கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தை சேமித்துவையுங்கள். அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை, திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" (மத் 6:19-21)

இந்த மண்ணுலக செல்வத்தை நாடும் நாம் அழிந்து போவோம். ஆனால் விண்ணுலக செல்வத்தை நாடினால் நிலை வாழ்வை அடைவோம். இதோ இந்த மண்ணுலக செல்வங்கள் காற்றடித்தாலோ, மழை பெய்தாலோ, வெள்ளம் தாக்கினாலோ, தீப்பிடித்து எரிந்தாலோ, பூச்சியோ துரும்போ அழித்தாலோ, மண்ணோடு மடிந்துபோய்விடும். இந்த செல்வத்தை நாடும் "செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம்" என்று இறைவார்த்தை மிகத் தெளிவாய் மாற்கு நற்செய்தி 10:23இல் உள்ள வசனத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இவ்வுலக செல்வத்தை எப்படியாவது பெறவேண்டும் என்று எண்ணி நாம் அனைவரும் தீய முறையில் செல்வம் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு தீய வழியில் பணம் சேர்க்கும் அனைவரையும் அப்பணமே அவர்களின் உயிரைக் குடித்துவிடும் (நீ.தி 1:19) "செல்வர்களே சற்றுக்கேளுங்கள். உங்கள் செல்வம் மக்கிப்போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளினால் அரிக்கப்பட்டுவிட்டன. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்சான்றாக இருக்கும். அது நெருப்புப் போல உங்கள் சதையை அழித்துவிடும்" (யாக் 5:1-3).

"கதிரவன் எழ வெயில் ஏறிப் புல் உலர்ந்துபோகும். அதன் பூ வதங்கிவிழும். அதன் அழகிய தோற்றமும் அழிந்துவிடும். அவ்வாறே செல்வரும் தம் அலுவல்களில் ஈடுபடும்போதே அழிவுறுவர்" (யாக் 1:11). "நாம் பொய் பேசியோ அல்லது ஏமாற்றியோ பிறருடைய பொருளைப் பெற்றோம் என்றால் அது காற்றாய் பறந்துவிடும். அவரது உயிரையும் அது வாங்கிவிடும்" (நீ.தி 21:6) இந்த செல்வம் ஒருபோதும் நிலைத்து நிற்காது.

"செல்வர் தாம் சேர்த்துவைத்த செல்வத்தை அரண் என்றும் உயரமான மதில்" (நீதி 18:11) என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அச்செல்வத்தால் அவர்களுக்கு அழிவு வரப்போகிறது என்று அறியாதவர்களாய் இருக்கின்றனர். இதோ, "தலைமுறை தலைமுறையாய் தன் குடும்பச் சொத்தைக் கட்டிக்காக்கிறவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு, ஏனெனில் உங்களுக்கு எஞ்சுவது வெறுங்காற்றே" (நீ.தி 11:29) என்று சாலமோன் தன் நீதியின் வழியாக உரைக்கிறார்.

ஆம், இவ்வுலகச் செல்வம் நம்மையும் இறைவனையும் பிரிக்கின்றது. அவருக்கும் நமக்கும் உள்ள பாலத்தை உடைக்கிறது. நம்மையும் அவரையும் இணையவிடாமல் தடுக்கிற மதில் சுவராய் இருக்கிறது. விண்ணகத்திற்குச் செல்லத் தடையாய் இருக்கும் கதவாய் நுழையலாம். ஏனென்றால் "செல்வர் விண்ணரசில் புகுவது கடினம்" (மத் 19:23) என இயேசு கிறிஸ்து தம் சீடரிடம் உறுதியாகக் கூறியுள்ளார்.

செல்வம் உடையவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதே எளிது" (மத் 19:24) என்ற மறைபொருளை அறிந்த பல புனிதர்கள், தங்கள் வாழ்வில் விண்ணக செல்வத்தை அடைவதற்குத் தடையாய் இருந்த இந்த மண்ணுலக செல்வத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, விண்ணக செல்வத்தை நாடினார்கள். ஏனெனில் விண்ணுலக செல்வமே தங்களுக்கு நிலைவாழ்வு தரும் என்று எண்ணி விண்ணுலக செல்வங்களாகிய அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, தன்னடக்கம், நன்னயம், நம்பிக்கை, தாழ்ச்சி, கீழ்படிதல், தன் சொந்த நாட்டங்களை வெறுத்தல், விசுவாசம், பிறரை மதித்தல், செபம் செய்தல், இறைவார்த்தையின்படி வாழ்தல் என்று தங்களையே இறைவனுக்காக அர்ப்பணித்தனர். இப்புனிதர்களைப் பொருத்தமட்டில் நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே தங்களது பெறும் ஒப்பற்றச் செல்வம் என்று கருதினார்கள். இதனால் அவர்கள் கிறிஸ்து இயேசுவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதினார்கள் (பிலி 3:8)

நாம் அனைவரும் இறைவனுக்கு "உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் நிறுத்தி வாழ வேண்டும் (பிலி 4:8). அதுமட்டும் அல்லாமல் நம்முடைய வாழ்வில் வலுவின்மையிலும் இகழ்ச்சியும் இடரிலும் இன்னனிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நாம் அகமகிழ வேண்டும். ஏனெனில் நாம் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவர்களாய் இருப்போம் (2 கொரி 12:10). இவ்வாறான வாழ்க்கையைத் தான் அநேக புனிதர்கள் வாழ்ந்து புனிதர்களானார்கள்.

புனிதர்களைப் போல் விண்ணக வாழ்வை நோக்கி நம் வாழ்வும் இருக்கவேண்டும். அப்போது நாமும் விண்ணுலக செல்வத்தைப் பெற்று விண்ணவராவோம். ஆனால் மண்ணக வாழ்வை நோக்கி இருந்தால் மண்ணக செல்வத்தைப் பெற்று அழிந்துபோம் மண்ணவராவோம். ஏனெனில் மண்ணுலக செல்வத்தை நம்புவோர் திடீரென உதிர்வர். ஆனால் விண்ணுலக செல்வத்தை நாடுவோர் தளிரெனத் தழைத்து நல்ல



கனி தருவர் (நீதி 11:28).

ஆகையால் நாம் அனைவரும் விண்ணக செல்வத்தை நாடியே பயணம் செய்வோம். ஏனெனில் நம் உள்ளம் எங்குள்ளதோ அங்கே நம் செல்வமும் இருக்கும். இயேசு தம் சீடரிடம் கூறியதை அதாவது "உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள் என்ற அவரது வார்த்தையை உணர்ந்து தியானித்து வாழ்வாக்கி வாழ்வோம்.

---

**நிம்மதி என்பது**
**சிலருக்கு மனம்**
**சார்ந்தது பலருக்கு**
**பணம் சார்ந்தது.**

**எட்டிவிடும் தூரத்தில்**
**வெற்றியும் இல்லை.**
**அதை விட்டுவிடும்**
**எண்ணத்தில் நானும்**
**இல்லை...**

**மனதில் பட்டதை**
**வெளியில் சொல்வதால்**
**சிலநேரம் பிரச்சினை**
**முடிகிறது. ஆனால்,**
**பிரச்சினையே பலநேரம்**
**அதனால்தான்**
**வருகிறது.**

**சிரிப்பதற்கு கற்றுக்-**
**கொள்ளுங்கள்**
**அழுவதற்கு உடன்**
**இருப்பவர்கள்**
**கற்றுத்தந்து**
**விடுவார்கள்**

**பணத்தின்**
**உண்மையான**
**மதிப்பு பிறரிடம் கடன்**
**கேட்கும்போதுதான்**
**தெரியும்.**

**நாம்**
**தடுக்கிவிழும்போது**
**அடுத்தவர்கள்**
**சிரிக்கிறார்களே என்று**
**கவலைப்படக்கூடாது.**
**நாம் சீக்கரம்**
**எழுந்தோமே என்று**
**பெருமைப்பட**
**வேண்டும்.**

**கடைசிவரைக்கும்**
**கூடவே**
**இருப்பேன் என்று**
**சொல்பவர்கள்தான்**
**பாதியிலேயே நம்மை**
**தனியாக விட்டுவிட்டு**
**செல்கிறார்கள்**
**சிலர் மணமாகி...**
**சிலர் பிணமாகி...**

**பணத்தால்**
**ஏமாந்தவர்களைவிட**
**பாசத்தால்**
**ஏமாந்தவர்கள் தான்**
**உலகத்தில் அதிகம்**

**கடந்த காலத்தை**
**சிலருக்கு மறக்க**
**முயல்வதிலும்,**
**பலருக்கு மறைக்க**
**முயல்வதிலும்**
**கழிந்துவிடுகிறது**
**நிகழ்காலம்**

**யோசிக்காமல் எடுத்த**
**முடிவுகள் அனைத்தும்**
**நம்மை யோசிக்க**
**வைத்துக் கொண்டே**
**இருக்கின்றன நீண்ட**
**நாட்களாக...**

**பொய் சொல்லி**
**உறவுகளை தக்க**
**வைக்க நினைக்காதே**
**நீ நீயாக இரு புரிந்து**
**கொண்டவர்கள்**
**இருந்துச் செல்லட்டும்**
**புரியாதவர்கள் பிரிந்துச்**
**செல்லட்டும்.**

**நீ பழையமாதிரி**
**இல்ல இப்போ**
**மாறிட்டே என்று**
**சொல்பவர்கள்தான்**
**நம் மாற்றத்திற்கு**
**முதல் காரணமாகவும்**
**இருப்பார்கள்.**

**எல்லாம் தெரியும்**
**என்று குழப்பத்தோடு**
**இருப்பதைவிட எதுவும்**
**தெரியாது என்று**
**தெளிவாக இருப்பதே**
**மேல்**

**வாழ்க்கையில்**
**சாதனை படைத்தோம்**
**என்பதைவிட**
**யாரையும் வேதனைப்-**
**படுத்தவில்லை**
**என்பதே சிறந்தது.**

# உதயத்தை இதயத்திலே பதித்த பொன் விழா நாயகர்



## அருட்பணி. F. A. இராஜரத்தினம் அடிகளார் I.V. Dei

தாயின் வயிற்றில் உருவாகுமுன்பே இறைவனால் முன்குறித்து வைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு கிறிஸ்துவின் அன்புப்பணியை தொடர அனுப்பப்பட்டு, இன்று தனது பணி வாழ்வின் பொன் விழாவைக் கொண்டாடும் அருட்பணி. F. A. இராஜரத்தினம் அடிகளாரை வாழ்த்தி நிற்கின்றோம்.

அருட்பணி. F. A. இராஜரத்தினம் அடிகளார் 12.02.1946ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் திரு. ஸ்ரான்லி யோசப் இராஜரத்தினம், திருமதி. ஓலிவ் சந்தியாப்பிள்ளை, இவரது ஞானப்பெற்றோர் திரு. பெனடிற், திருமதி. ஏப்லேற் ஆவர். பெற்றோரினதும், ஞானப்பெற்றோரினதும் விசுவாசத்திலும், பண்பாட்டிலும், பக்தியாலும் நல்ல கிறிஸ்தவ பிள்ளையாக இவர் வளர்ந்தார்.

1950 - 1953இல் மன்னார் திருக்குடும்ப கன்னியர் மட வித்தியாலயத்தில் மூன்று ஆண்டுகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். தந்தையின் இடம் மாற்றம் காரணமாக தன் சொந்த இடமான யாழ் நகருக்குச் சென்று புனித பத்திரிசியார் கல்லூரியில் மாணவனாக இணைந்தார். தனது படிப்போடு தனது ஆலயத்தில் பீடப்பணியாளராகவும், பாடகர் குழுவிலும் சேர்ந்து பணியாற்றினார்.

விசுவாசமும், பயபக்தியும், நல்வளர்ப்பும் கொண்ட இவரின் தாய் தன் தவப்புதல்வனை ஆண்டவரின் சேவைக்கு அர்ப்பணிக்க விருப்பம் கொண்டதற்கிணங்க தன் மகனின் விருப்பம் கேட்டு அவரின் சம்மதத்துடன், தந்தையின் விருப்பத்துடனும் 1957ம் ஆண்டு யாழ் புனித மாட்டீன் குருமடத்தில் இணைந்தார். தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் குருமட மாணவனாக 1962 வரை கல்வியைத் தொடர்ந்தார். குரு மாணவனுக்கு இருக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பக்தி, படிப்பு போன்ற குணங்களில் சிறந்து விளங்கினார். குருமடத்தில் இருக்கும் போது, தந்தையின் இழப்பையும், தனக்கு ஏற்பட்ட விபத்தையும், ஏற்றுக்கொண்டு, தாயின் தைரியத்திலும், சகோதரர்களின் உற்சாகத்திலும் தனது குருத்துவ படிப்பைத் தொடர்ந்தார்.

### அருட்பணி. லூயி மரி பரான் அடிகள் அ.ம.தி

வெண்பனி திரளும் கனடா நாட்டின் வடபகுதியில் பணிபுரிந்தவர் பரான் அடிகளார். பனிப்புயல் அடிக்கடி வீசும் பரந்த பிறையறீஸ் புல்வெளி பிரதேசத்தில் குதிரையின் மீது சென்று பலிபூசை நிறைவேற்றியும், திருவருட்சாதனங்கள் வழங்கியும் தம் பணியில் செயற்பட்டார். அவரது வாழ்வில் இயலாது என்ற சொல்லுக்கு இடம் இருக்கவில்லை. நற்செய்தி அறிவுரைகளின் படியான அர்ப்பண வாழ்க்கையின் மூலமாக மறைப்பணி ஆற்றுவதற்கு குருக்களையும், மணத் துறவு ஆண்களையும் கொண்ட "திருவுளச் சபை" என்னும் உலகுசார் அர்ப்பண வாழ்வு முறையை 1958 ஆடி 2ம் திகதி ஆரம்பித்தார்.

1963ம் ஆண்டு அருட்பணியாளர் பரான் அடிகளார், அக்காலத்தில் யாழ் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய மேதகு. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையை சந்தித்து தம் சபையைப் பற்றி எடுத்துக்கூறியதன் விளைவாக மூன்று அருட்சகோதரர்கள் கனடா நாட்டிலுள்ள திருவுளச் சபைக்கு அனுப்பப்பட்டார்கள். இம்மூவரில் ஒருவர்தான் இப்பொன்விழாக் காணும் அருட்தந்தை இராஜரத்தினம் அடிகளார் ஆவார்.

### இலங்கையில் திருவுளச் சபை உருவாக்கம்

இவர் 1969ஆம் அண்டு ஆனி 22ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அதன்பின் சபை நிறுவுரையாளர் அருட்பணி. லூயி மரி பரான் அடிகள் இலங்கையிலே திருவுளச் சபையை உருவாக்கும் தலைமைப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். அத்துடன் இலங்கை இந்தியா நாடுகளில் திருவுளச் சபையின் தலைவராக செயல்பட பணித்தார். இளமையும், கற்றலும், ஆளுமையும், இறைபக்தியும் கொண்ட அருட்பணி. இராஜரத்தினம் அடிகளார் திருவுளச் சபையை இலங்கையில் தொடங்கினார்.

### பொன்விழா நாயகனின் பணி வாழ்வு.

வானங்களை கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளோம். தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்தே தேர்ந்து கொள்ளப்படுகிறார்கள். காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகின்றார்கள். என்ற இறைவார்த்தைக்கேற்ப யாரும் இம்மதிப்புக்குரிய பணியை தாமே தேர்ந்து கொள்வதில்லை (எபி 14:5:4). அருட்பணி. இராஜரத்தினம் அடிகளார் தன் தலைமைப் பொறுப்பை கீழ்ப்படிவுடன் ஏற்றுக்கொண்டார். கனடா நாட்டிலே திருவுளச் சபைக்கான பயிற்ச்சிகளை பெற்ற இலங்கையின் முதல் குருவாக இவர் திகழ்கின்றார்.

சிறிது காலத்தின் பின் சொந்த நாடு திரும்பிய இவர் ஆயரின் விருப்பத்திற்கமைய பங்குப் பணியையும், சபையின் குழுவாழ்வையும் ஒருங்கே நிறைவு செய்து, சிறப்புறப் பணியாற்றினார். வளரும் பணிவாழ்வில், சபையினருக்கு ஓர் மத்திய இல்லம் வேண்டியதாகவிருந்தது. ஆயர் மேதகு. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் மறைவுக்குப் பின்பு ஆயர் மேதகு. தியாகுப்பிள்ளை ஆண்டகை மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றார். ஆயர் அனுமதியுடனும், ஆதரவுடனும் பெறப்பட்ட முகமாலைப் பதி அழகிய கட்டிட அமைவுடன் உருவாகியது. இளம் குருவான இவர், சகல வேலைகளையும் நேரில் கண்காணித்து கைகொடுத்து சிறப்புறக் கட்டி முடித்தார். "பரான் இல்லத்தை" சம்பிரதாய பூர்வமாக ஆயரவர்களால் திறந்து வைக்கும் வைபவத்தையும் நிறைவுபடுத்தினார். "பரான் இல்ல" வாழ்வு முகமாலையைச் சூழவுள்ளவர்களின் வாழ்வையும் வளமாக்கியது. மின்சார வசதி, அஞ்சல் அலுவலக வசதி, தொழில் வசதி யாவும் பெற்று அக்கிராமம் உயர்வடைந்தது. வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆலயம் போல், முகமாலை ஆரோக்கிய அன்னை ஆலயமும் சிறியதொரு யாத்திரை தலமாக வழிபாடு, வணக்கம் தவறாது இடம்பெற வளர்ச்சியுற்றது. சுருங்கக் கூறின் முகமாலைக் கிராமத்தை நவீன பட்டினமாக்கும் திட்டம் அவரிடம் இருந்தது. "பரான் இல்லம்" இருந்த காணி செந்நெல் வயலாகவும், பூத்துக் காய்க்கும் தோட்டமாகவும், பசுக்கள், கோழிகள் மலிந்த பண்ணையாகவும், தென்னைகள் நிறைந்த சோலையாகவும் மாறியது. பயணம் செய்வோர் இடையில் தங்கி களைப்பு நீங்கிச் செல்லும் "பாலை வனப் பசும்தரை போல்" மிளிர்ந்தது. சகல திட்டங்களையும் செபமுடன் செய்த பின் மத்திய இல்லப் பொறுப்பை அருட்பணி. கீதபொன்கலன் துரைசிங்கம் அவர்களிடம் ஒப்படைத்து, மீண்டும் பங்குப்பணி விரும்பி சிறந்த சேவையாற்றினார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கிறிஸ்து இராஜாவே வாழ்க! கிறிஸ்து அரசரே வாழிய வாழியவே!!

அன்பின் ஆட்சியில் அனைவரையும்
அரவணைப்பவரே!
அமைதியின் அரசனாய் அவணியில் உதித்தவரே!
அகிம்சை வழியில் வாழ அழைப்பு விடுப்பவரே!
அடியோர்கள் நாம் வணங்கினோம் ஆசீர்வாதம்
அருளுமே!

ஆதாரம் நீயே அரசரே! அரசர்க்கெல்லாம்
அரசானாய்,
ஆளுமையா, எம்மை அன்பு வழியில் வழி
நடத்துமையா,
ஆர்ப்பரித்தோம் அனைவரும் அண்டி வந்தோம் உம்
அடியவர்கள் தம்,
ஆளுமையா உம் மக்களை, அனைத்து வரங்களும்
அருள்வீரே!

இனிய எம் அரசே எழுந்தருளி ஆளும் எம் நாட்டை
இகமதில் இனிய ஆட்சி வரவே வந்தருளும் வரம்
தந்தருளும்
இதயங்களை பூரிக்க இனிய உம் ஆட்சி செழித்திட
இன்றும் என்றும் எப்போதும் உமது அரசு வளர்க.

ஈகை, இரக்கம், சாந்தி, சமாதானம் உம் ஆட்சியில்
வளர்க,
ஈசனே உம் கருணை, காருண்யம், காலமெல்லாம்
தோன்ற,
ஈர நெஞ்சங்கள் இனிய நெஞ்சங்களாய் மாறிட,
ஈந்தருளும் எந்நாளும் அருட்கொடைகளை
எம்மவர்க்கு!

உத்தமனே! இறைவா உம் இராட்சியம் பரம்புக!
உலகெல்லாம் உம் அரசு ஓயாமல் ஓங்குக!
உன்னத தேவனே! உம் வல்லமை உயர்ந்திடுக!
உமது இராட்சியம் வருக! உம் புகழ் எந்நாளும்
ஓங்குக!

ஊரெல்லாம் கொண்டாட்டம் உம் அரசின்
வருகையினால்,
ஊடகங்கள் ஓயாமல் உழைக்கின்றன உம் அரசை
பறைசாற்றுகின்றன,
ஊடறுத்து உம் வார்த்தை செல்ல உம் அருள்
அருளுமையா...
ஊக்கமுடன் செயலாற்ற உம் வரம் வேண்டும் ஐயா!

எந்தையே இறைவா! எழுந்தருளி வாரும் எம்
மத்தியில்,
எம்மைக்காத்து, கரங்களால் காத்து கவனித்தருளும்
ஆண்டவரே,
எந்நாளும் நாமும்மை போற்றிப் புகழ்ந்து
பாடுகின்றோம்,
எழுந்தருளி வாரும் அரசே! வாழ்த்துகிறோம்!
உம்மை அருள்வாய் எம்மை,

ஏடுகள் எடுத்தியம்பின உன் புகழை பரப்புகின்றன
உம் மாட்சியை,
ஏராளமான உள்ளங்கள் வாழ்த்துகின்றன உம்
அரசை,
ஓங்கும் இதயங்களை எழுப்பிட வாரும் இரங்கி
அவர்களை காத்தருளும்,
ஏசுவே வாரும், வந்தெம்மை பாரும் ஏங்குகின்றோம்!

ஐம்புலன்களாலும் அனைவரும் உம்மை
புகழ்கின்றோம் ஆண்டவரே,
ஐயங்கள் தீர்ந்திட வந்தரும் எம்மத்தியில்
எழுந்தருளும்.
ஐக்கியமாக நாம் வாழ அனைவரையும் ஆசீர்வதியும்,
ஐயா! உம் அண்டை நாம் வந்தோம் கருணையுடன்
காத்தருளும்,

ஒன்றே குலம் ஒருவனே தேவன் ஓங்குக உம் புகழ்!,
ஒவ்வொரு உள்ளமும் உம் வல்லமையை
பறைசாற்றுகின்றன
ஒற்றுமை உருவாக! உண்மை தழைத்தோங்குக!
ஒன்றிணைந்த சேவை செய்வோம் உம்
தாள்ப்பணிந்தோம்



ஓங்குக உம் புகழ் உயிர்ந்திடுக உம் அரசு,
ஓதிடுவோம் உன்நாமம் உலகெல்லாம் பரம்பிடுக
உம் புகழ்,
ஓயாமல் உழைத்திடுவோம் உம் அரசின்
வளர்ச்சிக்காய்,
ஓய்வின்றி பாடிடுவோம் பரமன் உன்புகழை ஒளிர்க
உம்புகழ்,

கிறிஸ்து அரசரே! கிறிஸ்துவத்தின் மணி மகுடமே!
கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும்
வளர்ந்திடுக உம் அரசு!
கிறிஸ்துவம் தழைத்தோங்க
கிருபை செய்யும் எம் இறைவா!
கிறிஸத்தவர்கள் வாழ்த்துகிறோம்...
வாழ்க! வாழ்க!! உம் அரசு!!!

அருட்சகோ. டெலாறோன் அ.கா



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பொதுக்காலத்தின் 33வது ஞாயிறு (17.11.2019)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** திருவழிபாட்டு ஆண்டினை நிறைவு செய்து இன்னுமொரு ஆண்டினை தொடங்கக் காத்திருக்கும் இறைமக்களான நமக்கு திருஅவையானது தன் மணவாளன் இயேசுகிறிஸ்து மீண்டும் வருவார் என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்க அழைப்பு விடுக்கின்றது. அரசசபைக்கு வரவிருக்கும் அரசனை வரவேற்க கட்டியம் கூறுவதுபோல் அமைந்துள்ளது இன்றைய வார்த்தை வழிபாடு. என்ன கடவுள் வருகின்றாரா? எப்பொழுது வருகிறார்? என்று கேட்டால் "தெரியாது" என்று தான் இயேசுவே பதில் கூறுவார். ஆக எப்பொழுது வருவார் என்பது நிச்சயம் அல்ல. என்றாலும் வரவேண்டிய நேரத்தில் கண்டிப்பாக வருவார் என்பதுதான் விவிலியம் கூறும் மறக்க முடியாத உண்மை. எனவே ஆண்டவர் வருகையை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கும் நாம் நமக்கு இறைவன் கொடுத்திருக்கிற பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுவோம். நம்வீடு, பணிமனை, கல்விக்கூடம், பங்கு, நாடு ஆகியவற்றில் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை திறம்படச் செய்வோம். இவ்வாறு கிறிஸ்துவில் இணைந்து அவருக்கு சாட்சிய வாழ்வு வாழ்ந்து அவரை எதிர்கொள்ள ஆயத்தமாக, இறையருள் வேண்டி மன்றாடப் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : மலாக் 4:1-2**
உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான்

**பதிலுரைப் பாடல் :**
மக்களினங்களை ஆண்டவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார்.

**இரண்டாம் வாசகம் : 2 தெச 3: 7 – 12**
உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! நீங்கள் தலை நிமிர்ந்து நில்லுங்கள் ஏனெனில் உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 21: 5–19**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மனமாற்றத்தின் ஊடாக இறைமக்கள் கிறிஸ்து இயேசுவின் இரண்டாவது வருகைக்காக காத்திருக்க தயார் செய்யவும் திருஅவையின் செயல்பாடுகளை நிறைவாக்க உழைக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் ஆகிய அனைவருக்கும் உமது ஆசீரை வழங்கி அவர்கள் இருள்சூழ்ந்துள்ள உலகில் ஒளிசுடர்களாக விளங்கிட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாட்டில் நடைபெற இருக்கும் தலைவருக்கான தேர்தல் மக்களுக்கு விடியலையும், ஒளியையும் தருவதாக அமையவும், எங்கெல்லாம் அறம் மறைந்து அநியாயம் தலைதூக்கிறதோ அங்கெல்லாம் ஆண்டவர் வருவார் அறத்தை நிலை நாட்டுவார் என்பதை உணர்ந்தவர்களாக தலைவர்களும் மக்களும் செயல்படவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

ஆண்டவரின் வருகையை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கும் நாம் அனைவரும் நமக்கு இறைவன் கொடுத்திருக்கின்ற பொறுப்புக்களை சரிவர நிறை-வேற்றவும் இயேசுவுக்கு சாட்சிய வாழ்வு வாழும்போது இன்னல் இடையூறுகளை ஏற்று உறுதியுடன் தூய பவுல் அடியாரைப் போன்று வாழ்வுக்கு இறைவார்த்தைக்கும் சான்று பகரவும் அருள்தர வேண்டுமென்று...

## கிறிஸ்து அனைத்துல அரசர் பெருவிழா (24.11.2019)

**வாசக விளக்கம்:** கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழாவை கொண்டாட ஒன்றுகூடி வந்திருக்கும் அன்பின் திருஅவையின் இறைமக்களே! மன்னராட்சி காலம் தொட்டு இன்று மக்களாட்சி நடக்கும் இன்றைய காலம் வரை கிறிஸ்து அரசனின் ஆட்சியை போன்றதொரு ஆட்சி முறையை நாம் கண்டதில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் அரசு அன்பின் அரசு, நீதியின் அரசு, உண்மையின் அரசு, கிறிஸ்து அரசருக்கு விழா எடுக்கின்ற இத்தருணத்தில் நம் உள்ளமெல்லாம் பொங்கி எழவேண்டும். இயேசுவை எம் வாழ்வின் தலைவராக ஏற்று சாரமிழந்து கொண்டிருக்கிற ஏழை எளியவர்களின் வாழ்வில் சாரமேற்ற வேண்டும். இவர்களின் மீட்பு நம் செயற்பாடுகளில் வெளிப்பட வேண்டும். ஏழைகளுக்காக தன்னையே ஒப்புக்கொடுத்த ஏழ்மையின் அரசர் இயேசுக்கிறிஸ்துவைப் போல் நாமும் நம்முடைய வாழ்வைப் பிறருக்காக இழந்து இறையாட்சியின் அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சமாதானம் நிலவப் பாடுபட்டு இயேசுவை எமது உள்ளத்திலும் இல்லத்திலும் அரசராக ஏற்று வாழ வரம் கேட்டு மன்றாடப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : 2 சாமு 5:1-3**
இஸ்ரயேலின் அரசராக அவர்கள் தாவீதை திருப்பொழிவு செய்தனர்.

**பதிலுரைப் பாடல் :**
அகமகிழ்வுடன் ஆண்டவரின் இல்லத்திற்கு போவோம்.

**இரண்டாம் வாசகம் : கொலோ 1:12-20**
தந்தையாம் கடவுள் நம்மை விடுவித்து தன் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்கு உட்படுத்தினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 23: 35–43**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசு ஆண்டவரின் அரசை பின்பற்றி அன்புடனும் நீதியுடனும் உண்மையுடனும் தன் நிர்வாக கட்டமைப்பில் வழிநடக்கும் திருஅவைக்கும் தலைவருமாக திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் என்றும் கிறிஸ்து அரசனின் பாதையில் வழிநடக்க வேண்டுமென்று...

இருளின் அதிகாரத்தில் இருந்து எம்மை விடுவித்த கடவுளுக்கு நன்றி கூறும் மக்களாக நாம் வாழவும் நாடுகள் எங்கும் நல்லாட்சி மலரவும் ஏழை எளியவர் ஒடுக்கப்பட்டோர் தம் வாழ்வில் மாற்றம் காணவும் இறையரசின் மதிப்பீடுகளில் அனைவரும் கைக்கொண்டு புத்துலகம் படைக்கவும் வரமருள வேண்டுமென்று...

கிறிஸ்து அரசருக்கு விழா எடுக்கின்ற இத்தருணத்தில் எம் உள்ளமெங்கும் உவகை கொள்ளவும், இயேசுவை எம் வாழ்வின் தலைவராக ஏற்று சாரமிழந்து கொண்டிருக்கின்ற ஏழை எளியவர்களின் வாழ்வில் சாரமேற்றவும். ஏழைகளுக்காக தன்னையே ஒப்புவித்த ஏழ்மையின் அரசர் இயேசுக்கிறிஸ்துவைப் போல நாமும் நம்முடைய வாழ்வைப் பிறருக்காக இழக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 15

# சாவு பற்றிய சிந்தனை

- நீ பிறருடைய உதவியை எதிர்பார்ப்பதைவிட, ஏற்ற காலத்தில், இன்றே, நல்லவற்றை உனக்குச் சேர்த்துக் கொள்வதும், அவற்றில் சிலவற்றை முன்னே அனுப்பி வைப்பதும் சிறப்பு
- உன்னைப்பற்றி இப்போது நீயே கவலை கொள்ளவில்லையொன்றால் உன்னைப்பற்றி வருங்காலத்தில் யார்தான் கவலை கொள்வர்?
- இதுதான் மிக விலையுயர்ந்த நேரம், இதோ, அந்த ஏற்புடைய காலம் இதுவே, இதோ! அந்த மீட்பின் நாள் இதுவே. (2கொரி 6:2).
- ஆனால், அழியா வாழ்வை அடையப் பலன் சேர்க்க உதவும் இந்நேரத்தை நன்முறையில் நீ பயன்படுத்தாதிருப்பது வருந்தத்தக்கது!
- நீ திருந்துவதற்காக ஒருநாள் அல்லது ஒரு மணிநேரம் கிடைக்காதா என்று ஏங்கும் காலம் வரும். அதை நீ அடைவாயோ என்பதுதான் ஐயத்திற்குரியது.
- அருமை நண்பா, அப்படியானால், நீ மட்டும் எப்பொழுதும் சாவுக்கு அஞ்சுபவனாய், அதை எதிர்நோக்கியவனாய் இருந்தால், எத்தனை பெரிய ஆபத்துக்களிலிருந்து உன்னைக் காத்துக் கொள்ள முடியும். எத்தனை மிகுந்த அச்சத்திலிருந்து உன்னை விடுவிக்க முடியும்.
- சாவு நேரத்தில் நீ அஞ்சாது களிப்புடன் இருக்க வேண்டுமென்றால், அதற்கு ஒப்ப இப்போது வாழக் கற்றுக்கொள்.
- ஒருநாள் நீ கிறிஸ்துவுடன் வாழத் தொடங்குவதற்காக, இன்று நீ உலகிற்கு இறந்தவனாய் இருக்கக் கற்றுக்கொள்.
- ஒருநாள் நீ சுதந்திரமாகக் கிறிஸ்துவிடம் விரைந்து செல்வதற்காக, இன்று அனைத்தையும் பழிக்கக் கற்றுக்கொள்.
- ஒருநாள் நீ திண்ணமான நம்பிக்கை பெறுவதற்காக இன்று உன் உடலைத் தவத்தால் ஒறுத்துக்கொள்.
- ஏ அறிவிலி! ஒருநாள்கூட இங்கே உனக்குப் பாதுகாப்பு இல்லாதபோது, நீண்டநாள் இங்கே வாழ ஏன் ஆசிக்கின்றாய்?
- எத்தனையோ பேர் ஏமாந்துபோயிருக்கின்றனர். நினையாத வேளையில் உயிர் நீத்திருக்கின்றனர்.
- அவன் வாளால் மடிந்தான். அவன் மூழ்கி இறந்தான். அவன் உச்சியிலிருந்து விழுந்து கழுத்தை ஒடித்தான். அவன் உண்ணும்போது உயிர் நீத்தான். அவன் ஆடும்போது முடிவு கண்டான். என்றிவ்வாறு அடிக்கடி பிறர் சொல்லக்கேட்டிருக்கிறாய் அல்லவா? ஒருவன் தீயினால், இன்னொருவன் வாளினால், வேறொருவன் தொற்று நோயினால், மற்றொருவன் கள்வனால் மாண்டான்.
- இவ்வாறு எல்லாருடைய முடிவும் மரணம்தான். மனிதனுடைய வாழ்க்கையும் நிழல்போல் திடீரென மறைந்து விடுகிறது.
- சாவுக்குப்பின் உன்னை நினைத்துக் கொள்பவர் யார்? உனக்காகச் செபம் செய்பவர் யார்?
- அருமை நண்பா, செய், உன்னால் இயன்றதைச் செய், இப்பொழுதே செய், ஏனெனில், நீ எப்பொழுது உயிர் துறப்பாய் என்பதை அறியாய். சாவுக்குப்பின் உன்னைத் தொடர்வது என்ன என்பதையும் அறிவாய்.
- உனக்கு நேரம் இருக்கும்போது அழியாச் செல்வங்களைச் சேர்த்துக் கொள்.
- உனது மீட்பைத் தவிர வேறு எதையும் நினைக்காதே. இறைவனைச் சார்ந்தவற்றை மட்டும் கருத்தில் கொள்.
- இறைவனின் புனிதர்களை வணங்கி, அவர்களை செயல்வழி நடந்து, அவர்களை இப்போதே உன் நண்பர்கள் ஆக்கிக்கொள். அப்படியானால், நீ இந்த வாழ்வைத் துறக்கும்போது, அவர்கள் உன்னை முடிவில்லாக் கூடாரங்களில் ஏற்றுக் கொள்வார்கள். (லூக் 16:9)
- உலக அலுவல்களில் எந்தக் கவலையும் இல்லாது. பயணம் செய்பவன் விருந்தினன் போலவும் மண்ணில் நீ வாழ்ந்துவா.
- நிலையான நகர் நமக்கு இங்கு இல்லை (எபி 13:14) ஆதலால், உனது ஆன்மாவைப் பற்றற்றதாகவும், இறைவன்பால் உயர்த்தப்பட்டதாகவும் காத்துக்கொள்.
- சாவுக்குப்பின் உனது ஆன்மா மகிழ்வுடன் ஆண்டவரை அடைய அருள் பெறும்வண்ணம், நீ உன் அன்றாட செபங்களையும், ஏக்கத்தையும் கண்ணீருடன் கலந்து அவருக்குச் செலுத்து.



# மீண்டும் விதைக்கப்பட்ட மறைசாட்சிகள்!!



திருமதி. அனசிலின்

2019 ஏப்ரல் மாதம் 21ம் திகதி பாஸ்கு ஞாயிறு அன்று, கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங்களிலும், உணவு விடுதிகளிலும் நடத்தப்பட்ட மனித குண்டு தாக்குதலில் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் சிறு காயங்கள், பெரிய காயங்கள், மன, ஆன்மீக பாதிப்புக்கள் என்ற வீழ்ச்சியிலிருந்து மீண்டு எழ கடினமாகவும், மனித வாழ்வு துச்சமாக்கப்பட்ட சம்பவமும், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சுற்றுச் சூழத்தாரின் மன உளைச்சலும் சொல்லில் அடங்காதவை.

கத்தோலிக்க திருச்சபையும் அரசாங்கமும் இணைந்து உடனடி நிவாரணமாக நிதி உதவி வழங்கியதுடன் இறந்தவர்களின் உறவினர்களையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் கத்தோலிக்க அருட்பணியாளர்களும், உள ஆற்றுப்படுத்துனர்களும் இணைந்து அம்மக்களோடு மக்களாக கலந்து, அவர்களின் தீராத துயரில் பங்குகொண்டு ஆன்மீக உதவிகளை வழங்கி, தற்காலிகமாக அவர்களின் மன உழைச்சலுக்கு மருந்தாக செயல்பட்டனர். அவர்கள் தீராத துயரிலிருந்து மீண்டெழ தோள் கொடுத்து உதவினர்.

ஆயினும் பாதிக்கப்பட்டவர்களும், சுற்றுச் சூழத்தாரும் ஒரே குரலாக, நிதி உதவியை விட இத்துயரத்தில் தள்ளப்பட்ட எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் மீண்டுமொரு முறை இவ்வாறான தாக்குதல்களும் வாழ்வின் பின்னடைவுகளும் இடம்பெறக்கூடாது எனவும் தொடர்ந்தும் இவ்வாறான பாரிய இழப்புக்கள் ஏற்படக் கூடாது என்ற ஆதங்கமும் யாரும் எதிர்காலத்தைப் பற்றிய கலக்கமும் அதிகரித்துக்கொண்டே இருப்பதை காண முடிகிறது.

எமது பேராயர் அதி.மேதகு.மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, பாதிப்புக்குள்ளானவர்களின் வீடுகளுக்கும் ஆலயங்களுக்கும் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூற முனைந்தாலும் வேதனை தாங்கமுடியாது குமுறி குமுறி அழும் மக்களின் முன்னால் மௌனத்தையே பதிலாக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளார். இம்மக்கள் இழந்ததற்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்...?

ஆயினும் மனித குண்டு தாக்குதல் ஏற்பட்டு ஆறுமாதங்களைக் கடந்த இவ்வேளை வரைக்கும், பல சந்தர்ப்பங்களில் அவர்களை ஒன்று சேர்த்து ஆன்மீக வழிபாடுகள் மூலம் உள்மன ஆற்றுப்படுத்தல், குணப்படுத்தல்கள், வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் என பல வேலைத்திட்டங்களை கத்தோலிக்க திருச்சபையின் செத்சரண என்ற அமைப்பு முன்னெடுத்து வருகிறது.

இவ்வேளைத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில்; உடல் மன, ஆன்மீக பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களையும், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில்; உடல், மன, ஆன்மீக பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களையும் இருநாள் திருயாத்திரையாக மருதமடு திருத்தலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இத்திருயாத்திரைக்கு அரசாங்கம் போக்குவரத்து பஸ் சேவையை வழங்கியது. செத்சரண அமைப்பும் இறை தூதுச்சேவை குழு அருட்தந்தையர்களும் இணைந்து மேலதிக செயல்பாடுகளில் ஈடுபட்டு, தீராத துயரில் மூழ்கியுள்ள மக்களை மீட்டெடுக்க முனைந்தனர்.

வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலும் நீர்கொழும்பிலுமிருந்து புறப்பட்டு சனிக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் மடுத்திருத்தலத்தை சென்றடைந்தது. அங்கு காலை உணவின் பின்பு தோட்டவெளி மறைசாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தை நோக்கி பேருந்து விரைந்தது. தோட்டவெளி மறைசாட்சிகளின் இராக்கினி திருத்தல பரிபாலகர் அருட்பணி பெனோ அலெக்சாண்டர் அவர்கள் அனைத்து மக்களையும் கைகுழுக்கி அன்புடன் வரவேற்றார்கள். அங்கு மறைசாட்சிகள் விதைக்கப்பட்டுள்ள (புதைக்கப்பட்ட) கல்லறைகளையும் பக்தியாக பார்வையிட்டதுடன் திருப்பலியும் நடைபெற்றது. கத்தோலிக்கர்களை அழித்து கிறிஸ்தவ மதத்தை வேரோடு சாய்க்க எத்தனித்த அரசனுக்கு பெரும் தோல்வி ஏற்பட்டது. காரணம் இன்று அந்த இரத்த சாட்சிகள் பெருகி முழு இலங்கையிலும் ஒளிர்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அன்று அவர்களிடையே தப்பித்துக்கொண்டவர்களே கொழும்பு, நீர்கொழும்பு




பிரதேசங்களில் குடியேறி தமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி வளர்ந்தனர்.

அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமை-யுள்ளதாய் உயிர்பெற்று எழுகிறது. மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது. (1கொரி 15:42- 44)

திருப்பலியில் மறையுரையின்போது அருட்பணி பிரியந்த அடிகளார் தோட்டவெளி மறைசாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தில் விதைக்கப்பட்டுள்ளவர்களின் வரலாறு சிறப்புமிக்கவர்கள் விதைக்கப்பட்ட இம் மண்ணையும் எலும்புகளையும் உரசி நீரில் கலந்து பருகும்போது தீராத நோய்கள் நீங்கி குடும்ப சமாதானம் பெருகி இறைவல்லமையைப் பெற்றுக்கொண்டதையும் விரிவாக பகிர்ந்துக்கொண்டார். (கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகையான ஞான ஒளியில் மறைசாட்சிகளின் வரலாறு தொடர்ச்சியாக பிரசுரிக்கப்படுகிறது. அதை வாசித்து பயனடையவும்)

கொழும்பு, நீர்கொழும்பில் மறைசாட்சிகளாக விதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை எடுத்துக் கூறியதுடன், புனிதர்களாக ஒவ்வொருவரும் இறை சந்நிதானத்தில் மின்னிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் எம் ஒவ்வொருவருக்காகவும் இறைவன் முன்னிலையில் ஓயாது மன்றாடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களிடம் எமது வேண்டுதல்களை சமர்ப்பிக்குமாறும், அவ்வேண்டுதல்கள் நிறைவேறும் பட்சத்தில், மன்றாட்டை ஏற்று செபித்த நிகழ்கால வேதசாட்சிகளின் பெயர்களையும், நிறைவேறிய புதுமையையும் எழுதித் தருமாறு கேட்டுக்கொண்டார். காயப்பட்ட மக்களிடமும் தாக்குதலுக்கு உள்ளான ஆரம்ப காலத்தில் பலர் தமக்காகவும் தமது குடும்பத்தினருக்காகவும் செபித்து புதுமைகளை எம்முடன் பகிர்ந்துக்கொண்டுள்ளதால், தொடர்ந்து தமக்காகவும் தமது குடும்பத்திற்காகவும் செபம் தேவைப்படுபவர்களுக்காகவும் செபிக்குமாறும், இறைவன் அவர்களுக்கு விசேட வரங்களை கொடுத்திருப்பதால் அவற்றை இனங்கண்டு செயல்படுத்த வேண்டுமென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

பாஸ்கு ஞாயிறு குண்டுத் தாக்குதலினால் விதைக்கப்பட்ட கத்தோலிக்க மறை சாட்சிகளும் ஏன் புனிதத்துவம் கொண்டவர்கள் என்பதை தெளிவுபடுத்தினார். இவர்கள் அனைவரும் 40 நாட்களாக பாஸ்கு கால ஒருத்தல்கள், ஒருசந்தி, உபவாசம் என பல பக்தி முயற்சிகள் செய்து தூய மனத்தோடு அன்றைய உயிர்த்த ஞாயிறு திருவிழா திருப்பலிகளில் கலந்துக்கொண்டவர்கள் என்பதை மறுக்க முடியாது. கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில், திருப்பலியில் தமது திருமுழுக்கு வாக்குறுதியை புதுப்பித்து, பாவங்கள் மன்னிக்கப்பட்டு தூய உள்ளத்தோராய் மன்றாட்டு வழிபாட்டின்போது விதைக்கப்பட்டார்கள். அவ்வாறே கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நற்கருணை ஆண்டவரை தமக்குள் தாங்கி தாமும் இறைவனும் ஒன்றோடு ஒன்றாக கலந்த நிலையில் விதைக்கப்பட்டார்கள். இவர்கள் இறைவன் முன்னிலையில் நட்சத்திரங்களாக மின்னிக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் எவ்விதமான சந்தேகங்களும் இல்லை. இவர்களை மறைசாட்சிகளாக தகுதியுள்ளவர்களே என்றார்.

அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்து விடுவார். இனிமேல் சாவு இராது. துயரம் இராது. அழுகை இராது, துன்பம் இராது முன்பு இருந்தவையெல்லாம் மறைந்து விட்டன!



# கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ்க் கத்தோலிக்க ஆசிரியர் தினம்

## கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்திலே...







கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ்க் கத்தோலிக்க ஆசிரியர் தினம் நான்காவது தடவையாக 05.10.2019 அன்று கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய பிரதான மண்டபத்திலே விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலை 09.00 மணியளவில் பிரதம விருந்தினரான திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும் கௌரவ விருந்தினரான கொழும்பு வலயக் கல்விப் பணிமனையின் பாடசாலைகள் நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாள் திருமதி ளு. பிரபா அம்மையாரும் தீபமேந்திய ஆசிரியர்களின் நடுவே மாலை அணிவித்து வித்தியாலய மாணவிகளின் பான்ட் வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றி வரவேற்கப்பட்டார்கள்.

முதலாவது நிகழ்வாக ஆண்டகையினாலே ஒப்புக்கொடுக்கப்பட்ட நன்றித் திருப்பலியில் கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நாமனைவரும் பங்கேற்றது ஒரு வரப்பிரசாதமே. எமது கத்தோலிக்க ஆசிரியர்களின் ஒற்றுமையின் வெளிப்பாடும் ஆகும். ஆண்டகை தமது மறையுரையிலே, "நாங்கள் யாருக்காகத் திருமுழுக்குப் பெற்றிருக்கின்றோம்? பவுலுக்காக, அப்பொல்லோவுக்காக, கேபாவுக்காக அல்ல; மாறாக, கிறிஸ்துவுக்காக மட்டுமே. நாம் ஒவ்வொரு நிலையில் வேறுபட்டாலும் ஆண்டவர் முன்னிலையில் ஒரே மக்களே" என்னும் கருத்தை வலியுறுத்திக் கூறினார். திருப்பலிப் பாடல்கள் வத்தளை றோ.க. தமிழ் வித்தியாலய ஆசிரியர்களாலே இசைக்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நன்றித் திருப்பலியைத் தொடர்ந்து தேநீர்



விருந்துபசாரம் இடம்பெற்றது. அவ்வேளையிலே, தமிழ் அப்போஸ்தலிக்கப் பணியும் ஆயரின் துணையாளரும் எமது கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் போஷகருமான அருட்பணி நாகரட்ணம் மனோகுமாரன் அடிகளாரும் அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளாரும் எம்முடன் இணைந்துகொண்டமை மிகவும் மகிழ்ச்சியான தருணமாகக் கொள்ளப்பட்டது.

தேநீர் விருந்துபசாரத்தினைத் தொடர்ந்து ஆசிரியர் தின நிகழ்வுகள் ஆசிரியர் கீதத்துடன் ஆரம்பமாகியது. வரவேற்புரையை வித்தியாலய அதிபர் அருட்சகோதரி வேர்ஜினியா பேதுருப்பிள்ளை அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து கத்தோலிக்க ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர்களால் வரவேற்புப் பாடல் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எமது போஷகரால் தலைமை உரை நிகழ்த்தப்பட்டது. அடிகளார் தமது உரையில், "தனித்தியங்கும் கத்தோலிக்கப் பாடசாலைகளும் தனித்து சேவையாற்றும் ஆசிரியர்களும் அதிகமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் அவற்றுள் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன எனவும், ஆசிரியர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக தவக்கால திருயாத்திரை போன்ற நிகழ்வுகளைச் செய்துகொண்டிருக்கின்றோம் எனவும் ஆசிரியர்களாகிய உங்களைப் பாராட்டுவதற்காகவே இன்று உங்களை அழைத்திருக்கின்றோம்" எனவும் கூறினார்.

இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி டொறின் டானியல் அவர்களால், ஆசிரியராக எம்மை உருவாக்கியமைக்கும் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் தமிழ்க் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தை உருவாக்கியமைக்கும் இறைவனுக்கு நன்றி கூறியும் தொடர்ந்து வரும் காலங்களிலும் எம்முடன் இருந்து எம்மை வழிநடாத்தும்படியும் இறைவனிடம் வேண்டியும் கவிதை ஒன்று வடிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட "நல்ல பெண்மணி மிக நல்ல பெண்மணி என்று பெண்களுக்கு



விழிப்புணர்வை வழங்கிய கிராமிய நடனம் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

தொடர்ந்து எமது கௌரவ விருந்தினராக வருகை தந்த திருமதி பிரபா அம்மையார் தமது உரையில், "இந்த வருடத்திற்கான எண்ணக்கருவான, "இளைய தலைமுறையினரை ஆசிரியப் பணியை நோக்கி ஈர்க்கச் செய்வது எமது தலையாய கடமை" என்னும் தொனிப்பொருளுடனே 2019ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது எனவும் உலகத்திலேயே மிக அதிகமானவர்களால் போஷிக்கப்படுகின்ற தொழிற்பிரிவினர் ஆசிரியர்கள்; ஆசிரியர்கள் மாத்திரமே இனம், மதம், மொழி அனைத்தையும் கடந்து அனைத்து மனிதர்களாலும் அனைத்து மாமனிதர்களாலும் கௌரவிக்கப்படுகின்றார்கள் எனவும் கத்தோலிக்கராகிய நாம் எமது உரிமைகளைப் பெறுவதற்கு நிறையப் போராட வேண்டியுள்ளது எனவும் அதிலிருந்து மீள்வதற்கு இவ்வருட தொனிப்பொருளை உள்வாங்கிக் கொள்வதனூடாக எமது அடையாளத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமெனவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது மனசாட்சிக்கு விரோதமாக செயற்படாமல், ஏனையவர்களில் இரக்கமாயிருக்கவும், தவறு செய்தவர்களை மன்னித்து அவர்களைச் சரியான விதத்தில் வழிகாட்டி, இன்னொரு சமுதாயத்தினருக்குக் கடத்துவதனூடாக அம்மாணவர்கள் தாம் ஓர் ஆசிரியராக வரவேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்க வேண்டுமெனவும் எமது கடமைகளைச் சரியாகச் செய்யும்போது எமக்கான கதவினைக் கடவுள் திறப்பார்" எனவும் எடுத்துக் கூறினார்.

கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்களால், "அன்பே வாழ்க! நல் அறிவே வாழ்க! அகிலம் எங்கும் நல் அமைதி சூழ்க!" என்று பெற்ற தாயினும் மேலாக அன்பைப்



**தகவல் : ஆசிரியை டெய்சி**

பொழிந்து, நல்ல கல்வியைப் பிறருக்காக ஊற்றும் பரிவு இன்னும் உயர்ந்திட வேண்டுமென இன்னிசையினூடாக ஆசிரியர்களை வாழ்த்தியமை எல்லோர் மனதிலும் புதிய உற்சாகத்தைக் கொடுத்தது.

கொழும்பு நல்லாயன் மகளிர் மகா வித்தியாலய ஆசிரியர்கள், கவலைக்குப் பதிலாக மகிழ்ச்சியாகவும், பயப்படாது பாதுகாப்பாகவும், பெருமை கொள்ளாது தாழ்ச்சியாகவும், மன அழுத்தத்திற்கு உள்ளாகாமல் அமைதியாகவும், வெறுப்புக்காட்டாது அன்பாகவும், பேராசை கொள்ளாது பகிர்ந்து வாழவும் வேண்டுமென இறைவார்த்தையின் ஒளியிலே, சிறப்பு நிகழ்ச்சியான தம் நாடகத்தினூடாக வழங்கியமை ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து எமது பிரதம விருந்தினர் தமது உரையில், "ஒரு வருடத்திற்கு திட்டமிடுகிறீர்களென்றால் விவசாயம் செய்யுங்கள்; பத்து வருடங்களுக்குத் திட்டமிடுகிறீர்களென்றால் தென்னை மரங்களை நடுங்கள்; நூறு வருடங்களுக்குத் திட்டமிடுகிறீர்களென்றால் இந்த சமுதாயத்தினருக்குத் தேவையான கல்வியைக் கொடுங்கள் எனவும் கல்வி புகட்டும் ஆசான்கள் உன்னதமானவர்கள் எனவும் ஒரு குழந்தையின் முதல்




ஆசிரியர் பெற்றோர், இரண்டாவது பெற்றோர் ஆசிரியர் எனவும் குழந்தையின் வளர்ச்சியில் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் கடமை இருக்கின்றது எனவும் ஆசிரியப் பணியை நான்கு வகைகளாகப் பார்க்கலாம்;

**1. கடமை :**

எனது வேலையைச் செய்து முடித்தால் சரியெனும் கடமை உணர்வுடன் செய்தல்

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# எளிய காணிக்கை... ஏற்புடையக் காணிக்கை!



அரசியின் பிறந்தநாள் விழா. அரசிக்கு பிறந்தநாள் பரிசு வழங்கும் நிகழ்வு. அரசியின் உறவினர். நண்பர்கள், அரசு அதிகாரிகள், பணியாளர்கள் என வரிசையில் நின்றுத் தங்கள் பரிசுகளை அளித்தனர். பணியாளன் ஜேம்ஸ் மிகவும் ஏழை. அரசிக்குப் பரிசளிக்க ஏதும் இல்லை. அவனிடம் இருந்த காசுகளுடன் கடை வீதிக்குச் சென்றபோது ஒரே ஒரு கைக்குட்டை மட்டுமே வாங்க முடிந்தது. அனைவருக்கும் கடைசியில் நின்றுத் தன் பரிசை அரசியின் கரங்களில் திணித்துவிட்டு வேகமாகத் திரும்ப நினைத்தான். அரசி அவனது கரங்களைப் பற்றிக்கொண்டு எனக்குக் கிடைத்தப் பரிசுகளிலேயே மிக விலை உயர்ந்தப் பரிசு இதுவே. ஏனெனில் இது கரங்களால் அளிக்கப்பட்ட பரிசு அல்ல. இதயத்திலிருந்து அளிக்கப்பட்ட பரிசு என்றார்.

**'இந்த ஏழைக் கைம்பெண் எல்லாரையும் விட மிகுதியான காணிக்கைப் போட்டிருக்கிறார்'** (லூக் 21:3) நாமும் இறந்த ஆன்மாக்களின் மாதத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்வோம்.

# மறைக்கல்வி அறிவோம்



**01. மனிதன் என்பவன் யார்?**

B மனிதன் என்பவன் இறைசாயலில் படைக்கப்பட்ட உடல், உள்ளம், ஆன்மா ஆகியவை கொண்ட படைப்பாளன்.

**02. முதல் முதலாக படைக்கப்பட்ட மனிதர் யார்?**

B முதல் முதலாக படைக்கப்பட்ட மனிதர்கள் ஆதாம், ஏவாள் என்ற எம் ஆதிப் பெற்றோர்களாவர்.

**03. ஆதாம், ஏவாளுக்கு இறைவன் கொடுத்த கட்டளை யாது?**

B அவர்கள் இன்ப வனத்திலுள்ள ஒரு மரத்தின் கனியை உண்ணலாகாது என்பதே அக்கட்டளையாகும்.

**04. ஆதாம் ஏவாள் அக்கட்டளையை கடைப்பிடித்தார்களா?**

B இல்லை, அவர்கள் அக்கட்டளையை மீறினார்கள்.

**05. இந்த பாவத்தினால் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் என்ன நேர்ந்தது?**

B ஆதாமும் ஏவாளும் இப்பாவத்தினால் கறைப்பட்டனர்.

B இறையருள், விண்ணகம் ஆகியவற்றை இழந்தனர்

B துன்பத்தையும், சாவையும் சம்பாதித்தனர்

B அருள் உயிர் முழுவதையும் இழந்தனர்.

**06. எல்லா மனித இனத்தாரும்ஆதாம் ஏவாள் ஆகிய இருவரது பாவத்தினால் பாதிக்கப்படுகின்றனரா?**

B ஆம்

**07. ஆதாம், ஏவாள் ஆகியோரின் பாவம் நம்மைப் பாதிப்பது எப்படி?**

B சென்ப பாவத்தோடு பிறக்கின்றோம். அதனால்

B தூய்மையையும் அருளையும் இழக்கின்றோம்.

B நமது ஞானம் பலவீனப்படுகிறது.

B தீமைக்கு ஆளாகின்றோம்.

B துன்பம், துயரம் மரணத்திற்கு ஆளாகின்றோம்.

**08. சென்ம பாவமில்லாமல் பிறந்தவர்களுண்டா?**

B ஆம், ஆண்டவர் இயேசுவும், அன்னை மரியாளும் திருமுழுக்கு யோவானும் சென்ம பாவமில்லாமல் பிறந்தவர்கள்.




# விவிலியப் பகுதி



**நற்செய்தி : புனித மாற்கு**
**அதிகாரம் – 08**

128. மக்களுக்கு இயேசு என்ன கட்டளை கொடுத்தார்?

129. மீதியாய் இருந்த துண்டுகளை எத்தனை கூடைகளில் அடைத்தார்கள்?

130. அங்கு இருந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?

131. தம் சீடர்களுடன் கடகேறி எங்கு சென்றார்?

132. இத்தலைமுறையினருக்கு எது கொடுக்கப்படமாட்டாது என இயேசு கூறினார்?

133. யாருடைய புளிப்பு மாவை குறித்து மிகவும் கவனமாயிருக்க இயேசு சொன்னார்?

134. இயேசு பார்வையற்ற ஒருவரை எந்த இடத்தில் கண்டார்?

135. பார்வையற்ற ஒருவரை இயேசு எங்கே கூட்டிச்சென்றார்?

136. இயேசு அவருடைய விழிகளில் உமிழ்ந்து என்ன கேட்டார்?

137. பார்வை பெற்ற பின்பு அவரிடம் என்ன சொன்னார்?

15

**கீழே தரப்பட்டுள்ள புதுமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் நவம்பர் 22ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ–மெயிலுக்கு அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.

# அப்பம் பகிர்ந்தளித்தல் புதுமை

புனித யோவான் 6:1-15


01



அந்நாள்களில் மீண்டும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். ..............................................

.................................................................. .

02



இயேசு தம் சீடரை வரவழைத்து அவர்களிடம்,
..................................
..................................
..................................
..................................
..................................
..................................
..................................
..................................
..................................
....... நான் இவர்களைப் பட்டினியாயக வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் தளர்ச்சி அடைவார்கள். இவர்களுள் சிலர் நெடுந் தொலைவிலிருந்து வந்துள்ளனர்" என்று கூறினார்.

03




அதற்கு அவருடைய சீடர்கள் ..........................
..................................
..................................
..................................
..................................
..................................
..................................
..................................
என்று கேட்டார். அவர்கள் 'ஏழு" என்றார்கள். தரையில் அமர மக்களுக்கு அவர் கட்டளைவிட்டார்!

04




பின்பு அந்த ..........................................................
..................................................................
பரிமாறும்படி தம் சீடர்களிடம்கொடுக்க, அவர்களும் மக்களுக்கு அளித்தார்கள்.

05



சிறு மீன்கள் சிலவும் அவர்களிடம் இருந்தன. ...
....................
....................
....................
....................
....................
....................
....................
....................

06



உடன
டியாகத்
தம் ...........
....................
....................
....................
....................
....................
....................
................

மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். ................
..................................................................
..................................................................

2010 - 2020

மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்

## நொறுங்கிப் போகாதே நண்பா!

# உன்னை மறுக்கின்றபொழுது என்னில் நிறைகின்றாய்



நான் உன்னை சிலுவையைச் சுமக்க படைக்கவில்லை. உன் உயிரைக் கேட்கவா, என் உயிரைக் கையளித்தேன்.

உன் உடலை வறுத்திக் கொள்ளவா? என் சாயலாக உனை வனைந்தேன்? நீ கண்ணீர் வடிக்கவா உன்னை என் கையில் தாங்கினேன்?

இல்லை நண்பா, நான் அவ்வாறு சொன்னது, வேறொரு வரலாற்றுப் பின்புலம்.

தன்னையே அதிகம் நேசித்த யூதர்களுக்கு நான் கொடுத்த மருந்து தன்னையே மறுத்தல்

தன்னையே அதிகம் நேசித்த யூதர்கள் என்னுடைய படைப்பான பிற இனத்தாரையும் நேசிக்க வேண்டும் என்பதற்காகவே அப்படி ஒரு சாட்டையடி வைத்தியம்.

ஆகவேதான் என் மகன் சொன்னார். "எது நன்மை செய்ய இடறலாக இருக்கிறதோ அதனை வெட்டி எறிந்துவிடு" (மத் 18:8-9). "தாயோ தந்தையோ எவர் இடறலாக இருந்தாலும் அவர்களைத் தள்ளிவிடு" (மத் 12:48-50).

கன்னி மரியா வாழ்நாள் முழுவதும் கணவன் உறவை அறியாதிருந்தார்.

என் மகன் இயேசு எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடு என்று அறிவுறுத்தினார்.

என் தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர அனுமதியும் என்று சொன்ன இளைஞனைச் சீடனாக ஏற்க மறுத்தார்.

எல்லாவற்றையும் இழந்த யாக்கோபையும் யோவானையும் தம் சீடர்களாக ஏற்றார்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு பின்வந்த மத்தேயுவும், யாரையாவது ஏமாற்றி எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்கிறேன் என்று சொன்ன சக்கேயுவும் இயேசுவின் தோழர்களானார்கள் இறையாட்சியின் விதையானார்கள்!

தொடரும்

# தீய பழக்கங்களைக் களைவது எப்படி?

அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.



**நாம் நினைப்பதைவிட அதிகமாக தீய பழக்கங்கள் எமது வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவற்றின் பாதிப்பு நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் உண்டு. எமது வாழ்வு பழக்கவழக்கங்களின் மிகப்பெரிய கூட்டுச் சேர்ப்பால் அமைக்கப்பட்டது. அவற்றில் சில நல்லவை, மற்றவை தீயவை. தொடர்ச்சியான பயிற்சியால் நற்பழக்கங்கள் எமது வாழ்வை வளமாக்குகின்றன, தீய பழக்கங்கள் எமது வாழ்வை வலுக்குறையச் செய்கின்றன. நத்தனியேல் ஏமன்ஸ் கூறுவதுபோல 'பழக்கம் ஒன்றில் மிகச்சிறந்த பணியாள், அல்லது மிக மோசமான எசமான்' எமது நோக்கம் எவ்வாறு எமது பழக்கவழக்கங்களை சிறந்த பணியாட்களாக்குவதும், தீயபழக்கங்களை களைந்து நற்பழக்கங்களை நம் வாழ்வில் மீண்டும் மீண்டும் படியவைப்பதென்பதாகும்.**

### நாம் மேற்கொள்ளக்கூடிய 5 படிமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

### 1. நாம் தீய பழக்கங்களை இல்லாதொழிக்க வேண்டும்.

தீய பழக்கங்களை எமது வாழ்விலிருந்து இல்லாதொழிக்க வேண்டும் அல்லது அவை எமது வாழ்வில் ஆதிக்கம் செலுத்தவிடக்கூடாதென்றும் நாம்



ஆசைப்படுகின்றோம். ஆனால் துர்அதிஷ்டவசமாக நாம் தீய பழக்கங்களில் இன்பம் காணுகின்றோம். சில வேளைகளில் அவற்றின் பின்விளைவுகளை நினைத்துக் கொண்டிருப்பது நம்மை திருத்தத்திற்கு இட்டுச் செல்லலாம். உதாரணத்திற்கு புகைப்பிடிக்கும் பழக்கத்தை எடுத்துக்கொள்வோம். சிலர் எவ்வளவு பணத்தை நாம் வீண் விரயமாக்குகின்றோமென்று சிந்தித்து அப்பழக்கத்தை நிறுத்திக் கொள்கின்றனர். சிலர் அதனால் வரும் நோயை நினைத்து விட்டுவிடு-கின்றனர். எவ்வாறாயினும் அவர்கள் அப்பழக்கத்தை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

### 2. எண்ணத்தையும் உணர்வையும் செயற்பாட்டால் உறுதிசெய்தல்.

எண்ணம், உணர்வு, விருப்பம் அனைத்தும் ஒரு பழக்கத்தை ஏற்படுத்துவதில் துணை நிற்கின்றன. எண்ணமும் உணர்வும் செயற்படுத்தாவிட்டால் அவை எளிதாக சிதறடிக்கப்பட்டுவிடும். மார்க் திவைன் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். "ஒரு பழக்கம் யன்னல் வழியாக தூக்கி எறியப்பட முடியாது. அதைப்படிப்படியாக செயலிழக்கச் செய்ய வேண்டும்". அதாவது, நாம் நம்மால் முடியாத ஒரு இலக்கை உடனடியாக முன்வைக்கக் கூடாது. முதலில் ஒரு நாளுக்கு அடுத்த மறு நாளுக்கென்று படிப்படியாக போகவேண்டும். இவ்வாறு வெற்றிக்கொள்ளப்பட்ட செயல் அடுத்த செயலையும் இலகுவாகச் செய்ய வழிவகுக்கும்.

### 3. உமது தீர்மானங்களை ஒரு சிலராவது அறியச் செய்ய வேண்டும்.

எமது தீர்மானங்கள் எவருக்கும் தெரியாது விட்டால் அவற்றை நாம் மீறினாலும் யாரும் அறியமாட்டார்கள். பெரும்பாலான எமது சமூகப்பழக்கங்கள் சமூகத்தினால் ஏற்றுக்கொள்-ளப்படுவதால் அல்லது நிராகரிக்கப்படுவதால் தீர்மானிக்கப்படுகின்றன. நிச்சயமாக எம்மில் சிலர் "நாம் பலவீனர்" என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஒரு சிலருக்காவது அது தெரிந்தால் நாம் உறுதியாயிருக்க உதவியாயிருக்கும்.

### 4. பழைய பழக்கங்களுக்குப் பதிலாக புதிய பழக்கங்கள்.

பழைய பழக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு சிறந்த வழி அவற்றிற்கு மாற்றீடான புதிய பழக்கங்களை ஏற்படுத்துவது. ஒவ்வொரு முறையும் தீய பழக்கத்திற்கான ஒரு சோதனை ஏற்படும்போது அதை முறியடிப்பதற்கான புதிய எண்ணத்தை மனதில் வரவழைக்க வேண்டும். விரும்பத்தகாத ஓர் எண்ணத்தை விரும்பிய ஓர் எண்ணத்தால் மாற்ற வேண்டும். இரு வகை எண்ணங்களும் ஒரே நேரத்தில் எம் மனதில் இருக்க முடியாது.

### 5. ஒரு பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு பார்க்கும், கேட்கும் முறைகளை பயன்-படுத்த வேண்டும்.

தொடர்ச்சியான எண்ணம் அல்லது செயற்பாட்டை ஏற்படுத்துவதற்கு கண், காதுகள் பெரிதும் துணையானவை. உதாரணமாக, நீரைப்பருகும் பழக்கத்தைப் போல ஆன்மீக ஊட்டச்சத்துக்களை பயன்படுத்துதல், இவ்வாறான செயற்பாடுகளை மெதுவாக, உறுதியாக, தொடர்ச்சியாகச் செய்யும்போது அது எமது ஆழ்மனதில் நிலையாகப் பதிந்துவிடும்.

# பொறாமை நிறைந்த அலகை மனித சமுதாயத்தை அழிக்கின்றது!



இறைமகனான இயேசு கிறிஸ்துவில் நம் விசுவாசத்தை அதிகரித்தருளும் என, ஆண்டவரிடம் மன்றாடுவோம்

கடவுள் நம்மைப் போல் மனிதரானதால் அலகை மனிதரை அழிக்கின்றது என்று, நவம்பர் 12, செவ்வாய் காலையில், சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையின் போது, சாலமோன் ஞானம் நூலிலிருந்து வாசிக்கப்பட்ட இத்திருப்பலியின் முதல் வாசகத்தை (சா.ஞா.2,23-3,9) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனிதஉரு எடுத்த இயேசு மீது பொறாமை கொண்ட, மாபெரும் பொய்யனான அலகை, மனித சமுதாயத்தை அழிக்கின்றது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுள் மனிதர்களை அழியாமைக்கென்று படைத்தார், தம் சொந்த இயல்பின் சாயலில் அவர்களை உருவாக்கினார், ஆனால், அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது என்ற, இந்த முதல் வாசகத்தின் முதல் வரிகள் பற்றி, மறையுரையில் விளக்கிய திருத்தந்தை, அலகை இருக்கின்றான் மற்றும், மனிதரான இறைமகன்மீது கொண்ட பொறாமையால், உலகில் வெறுப்பை விதைக்கின்றான், அது மரணத்திற்குக் காரணமாகின்றது, அனைவரும், உடன்பிறந்தவர்களாக, அமைதியில் வாழ வேண்டிய நம்மில், பொறாமை, ஆணவம், போட்டி போன்றவை இதயத்தில் நுழைந்தன என்று கூறினார்.

### புறங்கூறல்

நான் யாரையும் அழிக்கவில்லை என நீங்கள் கூறலாம், ஆனால், அது உண்மையில்லை, புறங்கூறல் பற்றி என்ன சொல்வது, நீங்கள் யாரைப் பற்றியாவது மோசமாகப் பேசுகையில், அவர்களை அழிக்கின்றீர்கள் என்று கூறியத் திருத்தந்தை, நாவு, பயங்கரமான ஆயுதம் என்று திருத்தூதர் யாக்கோபு சொல்கிறார், புறங்கூறுதல் கொலை செய்கின்றது என்று எச்சரித்தார்.

### பெர்லின் சுவர் நினைவு

பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்டதன் நினைவு நாள், போரின் கொடூரங்கள், நாத்சி கொள்கையாளர் மற்றும், தூய்மையான இனத்தைச் சேராத எவரையும் சித்ரவதைப்படுத்தியவர்களை மறையுரையில் நினைவுகூர்ந்த திருத்தந்தை, இந்தக் கொடுமைகளை ஆற்றுவதற்கு ஒருவர் பின்புலத்தில் இருக்கின்றார், இதையே நாம் சோதனை என்று சொல்கிறோம் என்றார்.

### அரசியலின் சக்தி

கடவுள் நம்மைப் போல் ஒருவரானதை, அலகையால் தாங்கிக்கொள்ள இயலவில்லை, இதனாலே அவன் அழிக்கின்றான், இதுவே, அலகையின் பொறாமைக்கு, நம் தீமைகளுக்கு, நம் சோதனைகளுக்கு, இவ்வுலகில் போர்கள், பசி, அனைத்து துன்பங்களுக்கு ஆணிவேர் என்றுரைத்த திருத்தந்தை, அழிப்பதும், வெறுப்பை விதைப்பதும், அரசியலிலும்கூட சாதாரணமானதாக உள்ளன என்று கூறினார். இத்தகைய அரசியல்வாதிகள், எதிரிகளை வீழ்த்துவதற்கு அவமதிப்புச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர், இது நாட்டின் நன்மைக்கு ஏற்றதல்ல என்று கூறியத் திருத்தந்தை,

நம் உடலின் தீய சோதனைகளிலிருந்து வெற்றிபெற, கிறிஸ்து மனிதரானார் என்றும், இயேசு கிறிஸ்துவில் நம் விசுவாசம் வளரச் செபிப்போம் என்றும் கூறினார்.

# திருத்தந்தை பிரான்சிஸ்,

## அங்கோலா அரசுத்தலைவர் சந்திப்பு!

ஆப்ரிக்காவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள அங்கோலா நாடு, அக்கண்டத்தின் ஏழாவது பெரிய நாடாகும்.19ம் நூற்றாண்டில் போர்த்துக்கல் காலனியாக மாறிய அங்கோலா, 1975ம் ஆண்டில் விடுதலையடைந்தது

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, அங்கோலா அரசுத்தலைவர் João Manuel Gonçalves Lourenço அவர்கள், நவம்பர் 12, இச்செவ்வாய் காலையில், திருப்பீடத்தில் தனியே சந்தித்து கலந்துரையாடினார்.

அங்கோலா குடியரசுக்கும், திருப்பீடத்திற்கும் இடையே நிலவிவரும் நல்லுறவுகள்,



அந்நாட்டின் பல்வேறு துறைகளில் கத்தோலிக்கத் திருஅவை ஆற்றிவரும் மதிப்புமிக்க பணிகள், குறிப்பாக, கடந்த செப்டம்பர் மாதத்தில், திருப்பீடத்திற்கும், அங்கோலாவிற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் சில கூறுகள் போன்றவை, இச்சந்திப்புக்கள் இடம்பெற்றன. மேலும், அங்கோலாவின் இப்போதைய நிலைமை பற்றிய உரையாடல்களில், நாட்டின் முன்னேற்றம், சமுதாய அமைதியைக் காத்தல் ஆகியவற்றில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பற்றி, இத்தலைவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.




# ஐ.எஸ். இஸ்லாமிய அமைப்பு

## கிறிஸ்தவர்களை குறிவைக்கிறது...



சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் நடத்தப்பட்டுள்ள இரட்டைத் தாக்குதல்களுக்கு, ஐ.எஸ். அரசு பொறுப்பேற்றுள்ளது, நாட்டில் இன்னும் போர் முடியவில்லை என்பதை, அந்த அரசு உணர்த்திக் கொண்டிருக்கின்றது சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் நவம்பர் அந்த அமைப்பு, கிறிஸ்தவர்களை குறிவைக்கிறது என்பதற்குத் தெளிவான அடையாளமாக உள்ளது என்று, அலெப்போ இலத்தீன் வழிபாட்டுமுறை அப்போஸ்தலிக்க நிர்வாகி ஆயர் Georges Abou Khazen அவர்கள் கூறினார்.

இத்தாக்குதல்களில், கிறிஸ்தவ சமுதாயத்தில் பலர் இறந்துள்ளனர், மற்றும் பலர் காயமுற்றுள்ளனர் என்று கூறும் ஆயர் Khazen அவர்கள், தற்போதைய ஆபத்தை இவை தெளிவாகக் காட்டுகின்றன என்று, சிரியாவின் வடகிழக்கில், குர்த் இனத்தவருக்கு எதிராக துருக்கியர்கள் தாக்குதலை நடத்துவது, 20ம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்தே சித்ரவதைகளையும், படுகொலைகளையும் அனுபவித்துள்ள மக்களின் மோசமான சூழலை மேலும் அதிகரிக்கின்றது என்றும் ஆயர் Khazen அவர்கள் கூறினார்.

மேலும், நவம்பர் 11, திங்களன்று நடத்தப்பட்ட வாகன குண்டு வெடிப்பு தாக்குதலில், சிரியாவின் அர்மேனிய-கத்தோலிக்க அருள்பணியாளர் Abraham Hovsep Bedoyan அவர்கள், கொல்லப்பட்டதையடுத்து Aid to the Church in Need பிறரன்பு அமைப்பிடம் பேசிய அலெப்போ அர்மேனிய-கத்தோலிக்க பேராயர் Boutros Marayati அவர்கள், சிரியாவில் இன்னும் போர் முடிய வில்லை என்பதை, ஐ.எஸ். இஸ்லாமிய அரசு உணர்த்திக் கொண்டிருக்கின்றது என்றார்.

சிரியாவின் கிழக்கேயுள்ள Deir Ezzor நகரின் மறைசாட்சிகள் ஆலயத்தில் நடைபெறும் பணிகளைப் பார்வையிட்ட பின்னர், தனது தந்தை மற்றும், ஒரு திருத்தொண்டருடன், தனது Qamishli பங்குத்தளத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த அருள்பணி Bidoyan அவர்கள் குண்டுவெடிப்பால் உயிரிழந்தார். படுகாயமுற்ற அவரது தந்தையும் உயிரிழந்தார். Deir Ezzor நகரில், ஆலயம் மற்றும், கிறிஸ்தவர்களின் வீடுகளைச் சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், இதனால் விசுவாசிகள் தங்களின் நகருக்குத் திரும்ப முடியும் என்றும் பேராயர் Marayati அவர்கள் கூறினார்.

★ ★ ★

# திருத்தந்தையின் இரங்கல் செய்தி!

மேலும், சிரியாவில் இத்திங்களன்று தனது தந்தையுடன் கொல்லப்பட்ட அருள்பணி Abraham Hovsep Bedoyan அவர்களின் அடக்கச்சடங்கில் கூடியிருக்கும் Qamishli அர்மேனிய கத்தோலிக்க பங்கு மக்களுக்கு நெருக்கமாய் உள்ளேன், அவர்களுக்காகவும், அவர்களின் குடும்பங்கள் மற்றும், சிரியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்காகவும் செபிக்கின்றேன் என்ற சொற்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 12 செவ்வாயன்று தன் டுவிட்டர் செய்தியில் எழுதியுள்ளார்.

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI









# மன்னார் மறைசாட்சிகள்

04

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

### மன்னார் மாதோட்ட வரலாறு

### 1.2.1 குருகுல பரதகுல வரலாறு...

குருகுல அரசர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் பரந்து காணப்பட்டனர். கரையார் ஐயமில்லாமல் அவர்களுடன் இணைக்கப்படுகின்றார்கள். (Raaghavan:1961: 138) குருகுலத்தவர்கள் காஞ்சிபுரம், காவேரிபூம்பட்டணம், கீழ்க்கரை, குருநாடு போன்ற இடங்களிலிருந்து குருகுல, வர்ணகுல (சுயபரியவால : 1987: 208) தலைமையின் கீழ் மன்னார்த் தீவு மாதோட்டம், யாழ்ப்பாணம், திருகோணமலை. மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வந்து குடியேறினர்.

மன்னார் மாதோட்டப் பகுதிகளில் கரையோரங்களில் வாழும் பரதவரைக் கரையார் என அழைப்பதில்லை. மாதோட்டத்தில் 24க்கும் மேற்பட்ட விவசாய கிராமங்களில் குருகுல மக்கள் வாழ்கின்றனர். (Gnanapragasar : 1925: 118-119) சுவாமி ஞானப்பிரகாசர் மன்னாரில் சஞ்சுவாம் கோயிலடியில் கவுரவரும் (குருகுலத்தார்) பரதவரும் வாழ்ந்தனர் எனக் குறிப்பிடுகின்றார். (ஞானப்பிரகாசர்:: 1928: 139) ஞானாதிக்கம் என்னும் யேசுசபைக் குருவானவர் மன்னார்த்தீவிலே புனித பிரான்சீஸ் சவேரியார் காலத்திலே கரையார்களும் பரதவர்களும் நிறைந்து காணப்பட்டனர் என்கிறார். (ஞானாதிக்கம் : 1964:3)

கௌரவர்கள், குரு குல அரசர்களாகும். பரதவர்களைப் பிரஜை களாகக் கொண்டு நெய்தல் நிலத்தையும் பள்ளரைப் பிரசைகளாகக் கொண்டு மருத நிலத்தையும், மறவர்களைப் பிரசைகளாகக் கொண்டு பாலை நிலத்தையும் ஆண்டனர்.

போத்துக்கேயர் காலத்திலத்தான் கௌரவர்கள் கரையார் என அழைக்கப்பட்டனர். இந்தியாவிலே கரையார் என்ற பெயர் பல சமூகத்தவர்களுக்கு பாவிக்கப்பட்டுள்ளது. மன்னார்த் தீவில் வாழ்ந்த கரையார் அஞ்ஞானிகளாகவும், காட்டில் கிடைக்கும் பழங்களை உண்டு வாழ்ந்தனர் என்றும் (King Joao :letter: 1546) அரசர் ஜவோ பாப்பரசர் பவுல் III என்பவருக்கு எழுதியுள்ளார். 1556 ஆம் ஆண்டு 70.000 கரையார் கொழும்பிலும் நீர்கொழும்பிலும் ஞானஸ்நானம் பெற்றனர். இவர்கள் மன்னார் வேதசாட்சிகளுக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் வடலி என்னும் கிராமத்தில் வாழ்ந்த கரையாரே மன்னாரில் வாழ்ந்த கரையாரின் உறவினர்களாகும். (Schurharmer: 1977: 348)

இவ்வாறு பல கோணங்களில் பார்க்கும் போது போத்துக்கேயர் காலத்தில் கௌரவர்களையும் (குருகுலம்) பரதர்களையும் கடையரையும் பள்ளரையும் பொதுப்பட கரையார் என அழைத்துள்ளனர் எனக்கொள்ளலாம். கௌரவரைக் கரையார் என புனித பிரான்சீஸ் சவேரியாரும், அருட்பணி கென்றிக் கென்றிக்கசுஸ் அடிகளாரும் கூறியிருப்பது தெளிவாகும். புனித பிரான்சீஸ் சவேரியார் இந்தியாவில் வாழ்ந்த பரதவர், கடையர், திமிலர், முக்குவர், சாணார், கரையார், பள்ளர் போன்றோரை தனித்தனிப் பெயர்களால் குறிப்பிடுகின்றார். மன்னார்த் தீவில் (கவுரவா) கௌரவர் வந்தனர் என சுவாமி ஞானப்பிரகாசர் கூறியுள்ளார். ஆகவே பரதவருடன் வாழ்ந்த கௌரவர்களே மன்னார்த் தீவில் புனித பிரான்சீஸ் சவேரியாராலும், அருட்பணி கென்றிக் கென்றிக்கஸ் அடிகளாராலும் கரையார் என அழைக்கப்பட்டனர்.

### 1.2.2 கடையர் வரலாறு

இச் சாதிக்குழுவினர் பற்றி எவரும் தெளிவாக ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. இவர்கள் மன்னார்த்தீவில் சாயவேர்கள் பிடுங்குவதற்காக ஒரு தமிழ் அரசனால் குடியேற்றப்பட்டவர்கள். இவர்கள் மன்னார்த்தீவில் சாயவேர் பிடுங்குவதிலும், சுண்ணாம்பு சுடும் தொழிலிலும் ஈடுபட்டனர். பள்ளருடன் நெருக்கமான தொடர்புள்வர்களாகக் கருதப்படுகின்றனர். யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் வாழும் பள்ளர்களின் தொழில் சாயவேர் புடுங்குதல் என அறியமுடிந்தது. மன்னாரில் வாழ்ந்த கடையர் கடற்கரையோரங்களில் சிப்பி பொறுக்கச் செல்வதுடன் கரையோரங்களில் வள்ளம் இழுத்து கரைசேர்ப்பதும் அவர்களது வேலையாக இருந்தது. இச் சமூகத்தவரையும் கரையார் என போர்த்துக்கேயர் அழைத்தனர் என சிலர் கருதுகின்றனர். இவர்கள் மன்னார்த்தீவில் கடற்கரையோரங்களில் சுண்ணாம்பு சுடுதல், சிறிதளவில் மீன் பிடித்தல் வள்ளங்களைக் கரைக்கு இழுத்து விடுதல் போன்ற பணிகள் செய்த படியால் இவர்களிலும் ஒருசிலர் வேதசாட்சிகளாக மரித்தனர் என ஏற்றுக்கொள்ளலாம்.

தொடரும்.....

# விசேட தேவையுள்வர்களுக்கான நிலையம் ! மாக்ஶ்ரீ !!

### மாக்ஶ்ரீ நாள் : கார்த்திகை 24

“மாக்ஶ்ரீ” நிலையத்தை நிர்மாணித்த அருட் தந்தை ஜூலியன் பீற்றர் திசேரா அடிகளாரைப் பற்றிய சில குறிப்புகளும் அவரின் நிர்மாண நிலையங்களும்.

ஹெட்டியாராச்சிகே ஜூலியன் பீற்றர் தெசேரா அவர்கள் 1946ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதி கம்பாவில் பிறந்தார். மாகோவிட்ட உரோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்விகற்று, பொரல்லை புனித அலோசியஸ் குருமடத்திலும் அப்புத்தளை ஆவடன் குருமடத்திலும் அம்பிட்டி தேசிய குருமடத்திலும் இறையியல் பயின்று, 1975ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22ம் திகதி குருத்துவத்தைப் பெற்றுக்கொண்டார்.

அல்பே பங்கின் உதவி பங்குத்தந்தையாக தனது குருத்துவ பணியை ஆரம்பித்து, 06 மாதத்தில் தோப்பு பங்கின் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். அப்பிரதேசத்திற்கு புதிய சிங்கள பாடசாலையை பெற்றுக்கொடுத்தார். அதன் பின்பு களுத்துறை கலமுல்லை பங்குத்தந்தையாக பணியாற்றிக்கொண்டிருக்கும்போது காலஞ்சென்ற திருமதி. ரீட்டா பெரேரா அவர்களினால் “மாக்ஶ்ரீ” நிலையத்தின் நிர்மாணப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் 1987ஆம் ஆண்டு அந்நிலையத்தில் இயக்குனராக நியமிக்கப்பட்டார்.

அருட்தந்தை ஜூலியன் திசேரா அடிகளார் களுத்துறை வட்டாரத்தில் சுகத்திபுர நிகழ்ச்சித்திட்டம், ஜுட்பியகம போன்ற வீட்டு வசதித்திட்டங்கள் பல நிர்மாணித்ததுடன் 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் அமைத்து குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுத்தார். அவர் களுத்துறை குருமுதல்வராக சேவையாற்றியதுடன் திவ்யநற்கருணை வழிபாட்டினால் முழு வட்டார மக்களையும் ஒன்றுதிரட்டி, அப்பிரதேசத்திற்கு பலவிதமான சேயையாற்றினார்.

மாக்ஶ்ரீ நிலையத்தின் கிளைகளாக 9 இல்லங்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. அவையாவன;

1. மாக்ஶ்ரீ இல்லம் கட்டுகுருந்து, களுத்துறை
   உடல் மன பாதிக்கப்படட சிறுவர் சிறுமியர் முதியோர் 63 பேர் வாழ்கிறார்கள்.
2. கர்தினால் குரே இல்லம் கட்டுகுருந்து, களுத்துறை
   உடல் மன பாதிக்கப்பட்ட 19 இளைஞர்கள்
3. புனித தெரேசா இல்லம் கட்டுகுருந்து, களுத்துறை
   பாதிக்கப்பட்ட இளம்பெண்கள் 22பேர்
4. மார்க்கோ இல்லம்: கடமுல்லை களுத்துறை
   வயது வந்த இளம் பெண்கள் 26 பேர்
5. மமா பபா இல்லம். கலமுல்லை களுத்துறை
   முழுமையாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 25 பேர்
6. புனித மரியாள் முதியோர் இல்லம்: குடா பயாகல
   42 முதியோர் வாழ்கிறார்கள்.
7. புனித அல்பேர்ட் இல்லம் வாந்துவ
   22 முதியோர்கள் வாழ்கிறார்கள்.







8. புனித அன்னம்மாள் இல்லம்: வாந்துவ
   19 முதியோர்கள் வாழ்கிறார்கள்
9. புனித மார்டீன் இல்லம்: கொட்டுகொட
   30 இளம் பெண்கள் வாழ்கிறார்கள்.

**கருணை உள்ளம் கொண்டவர்கள் தங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நல்க, கீழே தரப்பட்டுள்ள அருட்தந்தையுடன் தொடர்புகொள்ளவும்.**



**அருட்தந்தை பிரசன்ன கிறிஸ்டோபர்**
M: 94 777922009, L: 94 434222363
ஈ.மெயில்: marcsrihomes@gmail.com
FB: Marcsri Sarana Sewa Niwahana

இம்மாத புனிதர்

# கன்னி மரியாள் ஒப்புக்கொடுக்கப்பட்டது!

கார்த்திகை 21



கன்னிமரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் யூதமக்கள் தங்களுக்கு பிறக்க இருக்கும் குழந்தைகளை தேவாலயத்தில் கடவுளின் சேவைக்கு கையளிப்பதாக வாக்குறுதி செய்வார்கள். சிறுபெண்களும் தங்களைக் கடவுளுக்கு அர்ப்பணித்து தேவாலயத்தில் வாழ்ந்து கடவுளுக்குச் சேவை செய்யலாம். பரிசுத்த பெண்கள் இச்சிறுமியரைப் பராமரித்து ஐந்து வயது முடியும் முன்னரே சிறுவர் சிறுமியரை தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று குருவிடம் அவர்களைக் கையளிப்பார்கள். குரு அவர்களை கடவுளுக்கு ஒப்புக்கொடுப்பார். சிறுமிகள் விரும்பினால் அங்கேயே தங்கலாம். திருவுடைகள் தயாரித்தும் திருவழிபாட்டு நேரத்தில் துணை புரிந்தும் வேறு பல ஆராதனைச் சடங்குகளில் பங்கு பற்றும் அவர்கள் தேவாலயத்தில் நேரத்தைக் கழிப்பார்கள். அதற்கான பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்படும். சிறுமி மரியாளுக்கு மூன்று வயதானதும் அவள் தேவாலயத்திற்குச் செல்ல விரும்பினாள். அவளை விட்டுப் பிரிவது பெற்றோருக்கு கடினமாக இருந்தது. என்றாலும் கடவுளது சித்தத்தை அவர்கள் எதிர்க்கவில்லை. அவர்களே குழந்தையை ஆலயத்துக்கு எடுத்துச்சென்று கடவுளுக்கு அவளை ஒப்புக்கொடுத்தனர். புனித மரியாள் தன் கன்னிமையையும் தன்னை முழுமையுமே இறைவனுக்கு அர்ப்பணம் செய்தாள். கிரேக்க மக்கள் இவ்விழாவை இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா என்று கொண்டாடுகின்றனர்.

ஆதியிலிருந்தே இவ்விழா திருச்சபையில் கொண்டாடப்படுகிறது.

**சிந்தனை:** மரியாள் தன் பெற்றோரை நேசித்தாள். கடவுளை அதிகமாக நேசித்தாள். அதனால்தான்பெற்றோரை விட்டுப் பிரிந்து இளம் வயதிலிருந்தே தேவாலயத்தில் வாழ்ந்தாள், பெற்றோரை விட கடவுளை அதிகமாக நேசிக்கும் வரம் பெற்றுத் தர மன்றாடுவோம்.



# புனித செசீலியா

நவம்பர் 22



இவள் ஊரோமையில் பிறந்தாள். இளம் வயதிலேயே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ததால் மணமுடிக்க விருப்பமில்லை. என்றாலும் வலேரியன் என்ற வாலிபனை மணமுடிக்க வற்புறுத்தப்பட்டாள். மணமுடித்த அன்று அவள் தன் கணவனை நோக்கி கடவுளின் தூதர் ஒருவர் என் கற்புக்கு காவலராய் இருக்கிறார். எனவே கடவுளது கோபத்தை உம்மீது வரச்செய்யும் எதையும் செய்ய நீர் முயற்சிக்கலாகாது என்றாள். வலேரியன் அவளைப் பார்த்து, கடவுளின் அந்த தூதரை நான் பார்ப்பேனானால் இயேசு கிறிஸ்துவை விசுவசிப்பேன்" என்றார். அப்போழுது செசீலியா, 'ஞானஸ்நானம் பெற்றால் ஒழிய அவரைப் பார்க்க முடியாது" என்றாள். சுரங்கங்களில் வசித்த உர்பன் என்னும் பாப்பானவரிடம் வலேரியன் போய் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். வீட்டிற்குத் திரும்பியதும் தன் மனைவியின் அருகில் ஓர் அழகிய வானதூதர் நிற்பதைக் கண்டார். வலேரியனுடைய சகோதரர் திபூர்சியுஸையும் செசிலியா மனந்திருப்பினாள். அல்மாகுஸ் என்னும் உரோமை அதிகாரி இரு சகோதரர்களையும் பிடித்து வேதத்துக்காக அவர்களை கொன்றான். சில நாட்களுக்கு பின் செசிலியம்மாளையும் வேதத்துக்காக கொன்றார்கள். இவர்கள் கொல்லப்பட்டது மாற்குஸ் அவுரேலியுஸ் என்பவனது ஆட்சியில் அல்லது கொமோதுஸ் என்பவனது ஆட்சியில்; 161 ஆம் ஆண்டுக்கும் 190 ஆம் ஆண்டுக்கும் மத்தியில் இது நடந்தது.

புனித செசீலியம்மாளின் பெயர் திருச்சபையில் எப்பொழுதும் பிரசித்தி பெற்று வந்திருக்கிறது. திருப்பலி செபங்களின் போது ஆதிகாலத்திலிருந்தே அவளது பெயரைக் காண்கிறோம். கோவில் பாடகரின் பாதுகாவலியாக இவள் வந்திக்கப்படுகிறாள்.

***சிந்தனை***

இவளது முயற்சியால் இருவர் மெய்யான கடவுளை அறிய வந்தனர். இதுவரை எனது முயற்சியால் யாராவது அவரை அறிய வந்திருக்கிறாரா? நல்ல நூல்களின் வழியாகவும் அவரை பிறர் அறியச் செய்யலாம்

***செபம்***

**ஆண்டவரே! உம் மக்கள் உம்மையறிந்து நேசிக்கும் வரம் தாரும்.**

# ஆரோக்கியமான அவகேடோ என்ற பட்டர்.:.ப்ருட்



சூப்பர் மார்க்கெட்டுகளில் பச்சை நிறத்தில் பேரிக்காய் போன்றுஇருக்கும் அவகேடோ பழத்தை பார்த்திருப்பீர்கள். இதை **பட்டர்.:.புரூட்** என்றும் சொல்வதுண்டு. ஏதோ புதுசா இருக்கு என்று ஆச்சரியப்பட்டு பார்ப்பதோடு சரி, அதை யாரும் வாங்கியிருக்க மாட்டோம். ஆனால் அடுத்த முறை பார்த்தால், தவறாமல் வாங்கி சாப்பிடுங்கள். ஏனெனில் இப்பழத்தில் எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. அதில் நல்ல கொழுப்புக்கள், மக்னீசியம், பொட்டாசியம், வைட்டமின் சி, வைட்டமின் கே1, வைட்டமின் பி6 மற்றும் கார்போஹைட்ரேட் போன்றவை அடங்கியுள்ளன.

□கொழுப்பு மிகுந்துள்ள இந்த பட்டர் .:.ப்ரூட் கலோரி நிறைந்தது என்று சொல்வதுண்டு. ஆனால், சமீபத்திய ஆய்வில், இதில் உள்ள கொழுப்பு ஆரோக்கியமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இதில் கரோட்டினாய்ட்ஸ் (Carotenoids) எனப்படும் ஆன்டி ஆக்ஸிடன்டுகள் கொழுப்பில் கரையக்கூடியவை என்பதால், தைரியமாக இதயம் காக்கும் அவகேடோ பழத்தை உண்ணலாம்.

சிறிதளவு அவகேடோ பழம் சாப்பிட்டாலும், வயிறு நிரம்பிய உணர்வு உண்டாகும் என்பதால், எடை இழப்பு முயற்சிக்கு இது நல்ல கைகொடுக்கும். காரணம் இதில் இருக்கும் ஒலீயிக் அமிலமானது (Oleic acid) மூளைக்கு வயிறு நிரம்பிய சமிக்ஞையை அனுப்பிவிடும். அவகேடோ பழமானது, அதிக அடர்த்தி கொண்ட கொழுப்புப் புரதம் அல்லது எச்.டி.எல் கொழுப்பு போன்ற ஆரோக்கியமான கொழுப்புகளின் சிறந்த ஆதாரமாக இருப்பதால், அவை உடலில் நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கின்றன. இந்த நல்ல கொழுப்பு (HDL) இதய நோய் மற்றும் பக்கவாதத்தைத் தடுக்கக்கூடியது என்பதால், உங்களுக்கு மாரடைப்பின் குடும்ப வரலாறு இருந்தால், உங்கள் சமையலறையில் சில பட்டர் .:.ப்ரூட்ஸை எப்போதும் சேமித்து வைத்துக் கொள்வது நல்லது.

அடுத்து அவகேடோ பழம் எப்படி உங்களுடைய நல்ல கொழுப்பு அளவை அதிகரிக்கிறதோ, அதேபோல கெட்ட கொழுப்பு அளவை குறைக்கவும் செய்கிறது. மேலே சொன்ன அதே ஒலீயிக் அமிலமானது, இதயநோய்க்கு காரணமான கெட்ட கொழுப்பை குறைக்கும் செயலில் பெரும் பங்கு வகிக்கிறது. ரத்தக்கொழுப்பு அதிகம் இருப்போருக்கு அவகேடோ பழம் ஒரு போர் வீரனைப்போல பாதுகாக்கிறது. கர்ப்பிணிப்பெண்களின் தோழி என்று அவகேடோவை சொல்லலாம். பொதுவாகவே கர்ப்ப காலத்தில் பெண்களை, போலிக் ஆசிட் ஊட்டச்சத்து மாத்திரைகள் எடுத்துக் கொள்ள மருத்துவர்கள் பரிந்துரைப்பார்கள். அதற்குப்பதில் போலேட் ஊட்டச்சத்து மிகுந்துள்ள அவகேடோ பழத்தின் ஜூஸை ரெகுலராக கர்ப்பிணிப்பெண்கள் எடுத்துக் கொண்டால், .:.போலிக் ஆசிட் பற்றாக்குறையால் வரக்கூடிய குறைப்பிரசவத்தை தவிர்க்க முடியும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு மட்டுமல்ல, சாதாரணமாக எல்லோருக்குமே உடல் செல்களின் ஆரோக்கியத்திற்கு .:.போலிக் ஆசிட் அவசியம். செல்கள் பாதிப்பு புற்றுநோய்க்கு காரணமாகிவிடும். இதனால் நாம் அனைவருமே அவகேடோ பழத்தை எடுத்துக் கொள்ளலாம்.

வைட்டமின் கே, வைட்டமின் பி 5 மற்றும் வைட்டமின் பி 6 ஆகியவை நிறைந்துள்ளன. நோயெதிர்ப்பு மண்டலத்தின் பராமரிப்பிற்கு முக்கியத் தேவையான வைட்டமின் சி ஒரு சிறந்த ஆன்டிஆக்ஸிடன்ட் ஆகும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## 01 அனைவரின் கவனத்திற்கு!

மேதகு ஜனாதிபதியிடமோ மதிப்புக்குரிய நீதிமன்றத்திலோ எவ்விதமான வேண்டுகோளையும் விடுக்கவில்லை என்பதை தெளிவாக உறுதிப்படுத்துவதோடு இதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். இங்கு சொல்லப்பட்ட சூதித்தயா பற்றியோ அவரது வழக்கு பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்பதையும் தெரிவிக்கிறேன். சில வருடங்களுக்கு முன்பு என்னிடம் மதிப்புக்குரிய மகா சங்கம், மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள்; கைதிகள் விஷேசமாக இளம் கைதிகளுக்கு புனர்வாழ்வும் முறையான கல்வியும் பெற்றுக் கொடுக்க மேன்மை-தங்கிய ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் வேண்டுக்கோள் விடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்று செயல்படுத்தியதுடன், எதிர்கா-லத்திலும் கைதிகளுக்காக நீதி நியாயமான முறையில் நடுநிலைவகிக்க எதிர்பார்க்கிறேன்.

எமது பொதுவான இவ்வேண்டுகோளை தவறாகப் பிரயோகித்தமைக்காக எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன். கத்தோலிக்க திருச்சபைக்கும், காலி மறைமாவட்டத்திற்கும் தனிப்பட்ட முறையில், என்னை அசௌகரியப்படுத்தியதற்காகவும், எனது பெயரை களங்கப்படுத்தியதற்கான பொறுப்பை, இந்த ஊடக அதிகாரிகளினால் பொறுப்பேற்று கூடிய விரைவில் இத்தவறைத் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொ-ள்கிறேன்.

## 01 தொண்டன் சஞ்சிகையின்..

சு. பயஸ் பிரசன்னாவின் தலைமையில் தொண்டன் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக தொண்டன் சஞ்சிகையின் முன்னாள் இணையாசிரியர் திரு. S.S. யேசுதாஸ் (மலர்வேந்தன்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். சஞ்சிகையின் வெளியீட்டுரையை கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையின் 10வது நூலான "விடுதலைப் பயணம்" நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## 01 ஆன்மீகம் இல்லாத....

ஆன்மீக வாழ்வு வாழ்ந்தால் மனித உரிமைகளைப் பற்றிக் கதைக்கும் தேவை ஏற்பட்டிருக்காது. புதிய லிபரல் வாதத்தில், புதிய பொருளாதார முறை அறிமுகப்படுத்தி எமது நாகரீக உரிமையை அழிக்க, சில வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கிறார்கள். 2500 வருட பழமையான நாகரீக உரிமையாளர்களான எம்மை மாற்ற இடமளிக்கக் கூடாது. ஆன்மீக வாழ்வு கலாச்சாரம், மனிதத்தன்மை, ஒழுக்க விழுமியங்களை விலைக்கொடுத்து வாங்க முடியாது. ஜப்பான் அகோன்சூ விகார அதிபதி தொஷிகு நகாயி அவர்கள் உட்பட ஜப்பான் தூதுவர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பேராசியர், மகா சங்கக்காரர்கள் பண்டிதல்கள் பௌத்த தேரர்களும், கலந்துக் கொண்ட இந்நிகழ்வில், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித்த ஆண்டகை; நாட்டுக்கு, இனத்திற்கு செய்த சேவையை முன்கொண்டு கௌரவிக்கப்பட்டார்.

## 01 புனித பிரான்சிஸ்...

அருட்சகோதரி எல்சி றொட்ரிகோ புனித பிரான்சிஸ்குவின் மரியாளின் மறைபரப்பு சபையில் 1986ஆம் ஆண்டு தை மாதம் இணைந்து கொண்டார். இவர் தனது முதல் வாக்குத்தத்தத்தை 1988 தையிலும், நித்திய அர்ப்பணத்தை 1994 தையிலும் பெற்றுக் கொண்டார். இவர் தனது சேவையை நாட்டின் பல பாகங்களிலும் ஆற்றியுள்ளார். சிறப்பாக நீர்கொழும்பு, கலா ஓயா, மகியங்களை, மின்னேரியா, ஜீவனி சிறுவர் இல்லம் மொறட்டுவை, மற்றும் மொறட்டுவை கன்னியர் இல்லங்களில் ஆற்றிய பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. அண்மையில் மாகாண இல்லத்தின் தலைவியாகவும் பணியாற்றியுள்ளார். இதனைத்தவிர இவர் பல திறமைகளோடும் பல அரிய பொறுப்புக்களையும் வகித்துள்ளார். சிறப்பாக பல இடங்களில் கன்னியர் இல்லத் தலைவியாகவும், மாகாண பொருளாளராகவும், மாகாண ஆலோசகராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இன்று இவரை கொடையாக எமக்கருளியமைக்காக இறைவனுக்கு நன்றி கூறும் அதேவேளை மாகாணத்தலைவி எனும் தாராள மனதோடு ஏற்றுக்கொண்டமைக்காக எம் அருட்சகோதரிகளும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம். இன்று இவரை வாழ்த்தி பாராட்டுவதோடு இறைவனின் ஆசீரையும் வேண்டுகின்றோம். புனித பிரான்சிஸ் அசிசியார், எமது சபையின் ஸ்தாபகர் பாடுகளின் மரித்தாயார், மற்றும் எமது 8 பிரான்சிஸ்கன் சபையின் புனிதர்களும் இவரோடு இருந்து இவர் ஆரம்பிக்கும் இப்புதிய பணியை ஆசீர்வதிப்பார்களாக. மற்றும் இறையடி சேர்ந்த இவரது பெற்றோரும் சகோதரர் அருட்தந்தை பேர்சிலால் றொட்ரிகோவும் (கண்டி மறைமாவட்டம்) விண்ணகத்திலிருந்து தமது ஆசிகளைப் பொழிவார்களாக. எல்லாப்புகழும் இறைவன் ஒருவனுக்கே.

## 06 உதயத்தை...

### வளர்ச்சிப் பாதையில் திருவுளச்சபை

பொன் விழாக் காணும் தந்தை அவர்கள் (1969 - 2019) பரந்த நோக்குடன் பிறமத சகோதரர்கள் மட்டில் பெரிதும் மதிக்கப்பட்டவராக இருந்தார். முகமாலை பரான் தாய் இல்லமும், ஆரோக்கிய அன்னை ஆலயமும் திருவுளச்சபையை வளர்த்த "அமுத சுரபி" என்று பயன் பெற்ற மக்களும் பயனாளிகளும் பெருமையடைகின்றார்கள்.

இன்று பல குருக்களும், மணத்துறவு ஆண்களும், குடும்பங்களும் திருவுளச்சபையை அணி செய்கின்றார்கள். இனக்கலவரங்களின் போது இன்னலுற்ற மக்களுக்கு வாழ்வாதார மனிதாபிமான உதவிகளையும் தந்தையவர்களின் தலைமையில் திருவுளப் பணிச்சபை மேற்கொண்டதையும் மக்கள் நன்றியோடு நினைக்கின்றார்கள். தந்தை அவர்களைத் தொடர்ந்து வந்த அருட்தந்தையர்கள் சிறப்பாக சபையை வழிநடாத்திட பொன் விழா நாயகர் ஆலோசகராக இருந்து வழிநடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

ஓய்வு பெறவும் மருத்துவ வசதி பெறவும் 1988ம் வருடம் தனது இடத்தை அருட்திரு பிலிப் அடிகளாரிடம் வழங்கி கனடா நாடு மீண்டும் சென்றார். அங்கிருந்தும் திருவுளப்பணியோர் நலன்களை அக்கறையுடன் கவனித்து வருகிறார். தமிழ் அகதிகளின் ஆன்மீக நலன்களையும், தேவைகளையும் கனடா நாட்டில் கவனிக்கும் பொறுப்பான பணியிலும் ஈடுபட்டுள்ளார். பொன் விழாக் காணும் அருட்தந்தை அவர்களை, அவர் சேவைகளை நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம். அவர் தொடர்ந்து பல்லாண்டு அமலன் அருட்குருவாய் பணிபுரிய வேண்டுதல் செய்கின்றோம்.

தந்தை அவர்கள் கனடாவில் வாழ்ந்தாலும் அவரது இதயத் துடிப்பு, இலங்கையை நோக்கியே இன்றும் இருக்கின்றது. தான் வளர்ந்த திருவுளச் சபை மட்டில் இன்றும் அவர் பற்றுக் கொண்டுள்ளவராக உள்ளார் என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இவர் இனிவரும் காலம் முழுவதும் உடல் நலமும் உள்ளப் பலமும், ஆன்மீக வளமும் கொண்டு நீடுளி வாழ வாழ்த்துகின்றோம்.

**அருட்சகோ. மருசலின், திருவுளச் சபை**

## 14 ஆரோக்கியமான...

நம்முடைய குடல் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு போதுமான நார்ச்சத்துள்ள உணவுகள் உட்கொள்வது அவசியம். நார்ச்சத்து மிக்க அவகேடோவை உட்கொள்வதன் மூலம் மலச்சிக்கல் பிரச்சினையிலிருந்து விடுபடலாம். மேலும், கொழுப்பு மற்றும் ரத்த சர்க்கரை அளவைக் குறைக்கவும் உதவுகின்றது.

ஓர் ஆய்வின்படி, மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் அவகேடோ முக்கிய பங்களிப்பதாகத் தெரிகிறது. ரத்த ஓட்டத்தை அதிகரிப்பதோடு, ரத்த அழுத்தத்தையும் குறைப்பதால், மூளை எந்தவித இடையூறும் இல்லாமல் ஊட்டமடைகிறது. காரணம், உயர் ரத்த அழுத்தம் பெரும்பாலும் அறிவாற்றல் வீழ்ச்சியுடன் தொடர்புடையது, எனவே ரத்த அழுத்தத்தை சீராக பராமரிப்பதன் மூலம், முதுமையோடு தொடர்புடைய மறதிநோய்க்குக் காரணமான மூளையின் சாம்பல் செல்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முடியும்.

அவகேடோ எனப்படும் பட்டர் ஃப்ரூட் உடலில் ஏற்படும் அழற்சியைத் தடுக்க உதவுகிறது, இதிலிருக்கும் பைட்டோஸ்டெரோல்கள் (Phytosterols) குறிப்பாக ஆர்த்தரைடிஸுக்கு காரணமான அழற்சியை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகின்றன.

சிறுநீரகத்தில் ஏற்படும் கற்கள் மற்றும் சிறுநீர்ப்பை பிரச்சினைகளைத் தீர்க்க இந்த பழத்தை நாம் சாப்பிடலாம். இது சிறுநீரை அதிகளவில் உற்பத்திசெய்து சிறுநீர்ப்பாதையில் உள்ள கற்களின் அடைப்பை நீக்குகின்றது.

கண்களின் பார்வை திறனை அதிகரிக்கவும், புரை வளர்தலை கட்டுப்படுத்தவும் அவகேடோ மிகவும் பயனுள்ள பழம். கண்களில் ஏற்படும் கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல் போன்ற பிரச்னைகளுக்கும் நல்ல தீர்வு கிடைக்கும்.இதன் விதை கூட, மருத்துவ நன்மைகளைக் கொண்டுள்ளது. லுகேமியா எனப்படும் ஒரு வகை புற்றுநோயை எதிர்ப்பதற்கான ஆற்றலுள்ள ஒரு மூலப்பொருள் இதன் விதையில் உள்ளதாக ஒரு ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

## 02 விசேட மறைபரப்பு...

பங்கின் அருட்பணி. கிளமன்ட் யேசுதாசன் அடிகளாரால் நடத்தப்பட்டது. இதன்போது ஏராளமான கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை கடந்த மாதம் முழுவதும் அன்னையின் திருசுரூபம் வீடுவீடாகக் கொண்டு செல்லப்பட்டு செபமாலை தியானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தகவல் : இப்சான், ஹட்டன்.**



## மணமகன் தேவை

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட 37 வயதுடைய மணமகளுக்கு மணமகன் தேவை. கத்தோலிக்கர் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு :**

**077 4444411, 075 2005851**

(41614)

கொழும்பு றோமன் கத்தோலிக்க, 1988ம் ஆண்டு பிறந்த, படித்த, தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வு துறையில் பணிபுரியும், நற்குணமுள்ள தமது மகளுக்கு படித்த, நல்ல குணமான மணமகனை பெற்றோர் தேடுகின்றோம்.

**தொடர்புகளுக்கு : 076 7680438**

(41622)

## 09 கொழும்பு உயர்...

**2. சந்தர்ப்பம் :**

பல துறைகளுக்கு விண்ணப்பித்து ஆசிரிய துறைக்கே எனக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்னும் உணர்வு

**3. விருப்பு :**

ஆசிரியப் பணியே வேண்டும் என்னும் விருப்புடன் வருதல்

**4. அழைத்தல் :**

ஆண்டவரின் அழைப்பையேற்று பணிவோடு பணி செய்தல்

இவற்றுள் நாம் தேவ அழைத்தலுடன் பணி செய்ய வேண்டும் எனவும் இயேசுவைப்போல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் வேண்டுமெனவும் இயேசு-வைப்போல் மாணவரின் மனநிலையை அறிந்து கற்றுக்-கொடுக்க வேண்டுமெனவும் ஒரு நாட்டின் தலைவர், திருத்தந்தை பிரான்சிஸிசை நோக்கி, "நீங்கள் உலகத்தின் மனசாட்சி" எனக் குறிப்பிட்டதாகவும் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை பலர் எதிர்த்தாலும் பின்னர் அவரின் வாழ்வால் அவரை ஏற்றுக்கொண்டது போல், நாமும் எம் வாழ்வால் மாணவருக்கு சொல்லிக்கொடுப்போம்" எனவும் கூறினார். தொடர்ந்து எமது கத்தோலிக்க ஆசிரியர் சங்க செயலாளரும் ஆசிரிய ஆலோசகருமான செல்வி. D.I. ஜோசப் அவர்களினால் நன்றியுரை வழங்கப்பட்டது. அன்றைய நிகழ்விலே தமது குரல் வளத்தால் அறிவிப்பினை மேற்கொண்டு அனைவரையும் ஈர்த்தவர் வத்தளை றோ. க. த வித்தியாலய ஆசிரியை திருமதி டயஸ் அவர்களாவார்.

நிறைவாக மதிய போசன விருந்துபசாரம் இடம்பெற்றது. இவ் விருந்துபசாரத்தின்போது ஆசிரிய-ர்கள் விருந்தினர்களுடன் மனம்விட்டுப் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததுடன் ஆசிரியர் - ஆசிரியர் உறவும் வலுப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் ஆசிரியர்களுக்கான அன்பளிப்புகளும் வழங்கப்பட்டிருந்ததோடு விழா இனிது நிறைவுற்றது.

**நன்றி**

## 10 விவிலிய வினா விடை

128. தரையில் அமர (8:6)
129. ஏழு கூடைகள் (8:8)
130. நாலாயிரம் பேர் (8:9)
131. தல்மனுத்தா வுக்கு (8:10)
132. அடையாளம் (8:12)
133. பரிசேயர், ஏரோதியர் (8:15
134. பெத்சாய்தா (8:22)
135. ஊருக்கு வெளியே (8:23)
136. ஏதாவது தெரிகிறதா? என்று கேட்டார் (8:23)
137. ஊரில் நுழைய வேண்டாம் (8:26)

## 01 பக்தி பிரவேதனய...

தேசிய வைத்தியசாலை உட்பட அரசாங்க வைத்தி-யசாலையில் இறைபணியில் இணைந்து வென்னப்புவ, "தாசரேத்"ல் உரையாளராகவும், தலைமைத்துவம் கொண்டவராகவும் சேவையாற்றினார். 2009ல் அ.ம.தி கொழும்பு பிரதேசத்தில் இறை அழைத்தலின் இயக்குனராக நியமிக்கப்பட்டு 9 வருட சேவையின் பின்பு 2018ல் பொல்வத்த "தெல்அருன" (அ.ம.தி) குருத்துவ பயணத்தின் பொருளாராகவும், உரையாளராகவும் கடமையாற்றினார்.

"பக்தி பிரவேதனய" ஊடாக அறிபோருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியை திறம்பட ஆற்றிய புதிய அருட்பணியாளரை வாழ்த்துகின்றோம்.





# நீங்கள்

**கத்தோலிக்கராயின்,**

வயது 18 இற்கு மேற்பட்டவராகவும், 50 இற்கு குறைந்தவராகவும் இருப்பின், கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவராயின், இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்.

## உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கொழும்பு புனித யோசேவ்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரியினால் தற்பொழுது உங்களுக்கும்...

# டிப்ளோமாவும் பட்டப்படிப்பும்

## எங்கள் இலக்கு

1. பொதுநிலை, துறவற கத்தோலிக்கருக்கு, கத்தோலிக்க திருமறையினை தமிழ்மொழியில் ஆழமாக பயிலுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கல்.
2. இதன் வழி அவர்களை விசுவாசத்தில் உறுதி பெறச்செய்தல்.
3. அவர்கள் ஆழமான அறிவினைப் பெறவும், மறைபரப்புப் பணியில் ஆர்வம் கொள்ளவும் செய்தல்.
4. மூன்று வருட பாடநெறியில் சித்தியெய்தியவர்களுக்கு 'டிப்ளோமா" சான்றிதழ் வழங்கல்.
5. டிப்ளோமா சான்றிதழோடு இறுதி ஆண்டு கற்கை நெறியினை பூர்த்தி செய்து பட்டப்படிப்பில் சித்தியெய்தியவர்களுக்கு உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற கிறிஸ்தவ கற்கைநெறி தொடர்பான கலைமானி பட்டத்தை வழங்கல்.

**வாருங்கள், சேருங்கள்**
**மறைபரப்பாளராக மாறிடுங்கள்**

## கல்வித் தகைமைகள்

### டிப்ளோமா

☆ க.பொ.த (சா/த) அல்லது மறையாசிரியர் இரண்டாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

### பட்டப்படிப்பு

☆ க.பொ. த (சா/த) பரீட்சையில் (தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட சித்தியடைந்திருத்தல்)
☆ க.பொ.த (உ/த) பரீட்சையில் (3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்)
☆ அருளாளர் யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்

### சான்றிதழ்

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகள் இல்லாதவர்களும், மறையியலில் ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்ள விரும்பின் கற்கை நெறியில் முற்று முழுதாக கலந்து கொண்டு சான்றிதழ் பெறும் வாய்ப்பும் உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.**
☆ அருட்தந்தை றெஜினோல்ட் லூசியன் (OMI)
தொலைபேசி : 011 – 2446123, 071 – 8299151
: 077 – 7134775, 077 – 1227773

### நேர்முகப் பரீட்சை விபரம்

திகதி : 07 – 12 – 2019
நேரம் : பி.ப 4.00மணி முதல் 6.30மணி வரை
இடம் : கொழும்பு அக்குவைனஸ் கல்லூரி தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்

### விரிவுரை விபரம்

நாள் : சனிக்கிழமைகளில் காலை தொடக்கம் மாலை வரை
இடம் : கொழும்பு அக்குவைனஸ் கல்லூரி தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்.
கட்டணம் : அனுமதிக் கட்டணம் – 1000/=
ஒரு வருடத்திற்கு – 7200/=

(41731)




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீபய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்